Registered as a news paper

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 24 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 26 (09.12.2004) வியாழக்கிழமை இதழ்: 70

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

FedEx Express

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

## கடற்படையின் தாக்குதல் பலத்தை அதிகரிக்க

# இந்திய கடற்படையுடன் இணைந்து அடுத்த வாரம் பாரிய கூட்டுப் பயிற்சி

(கொழும்பு)

இந்திய - இலங்கை கடற்படைகள் இணைந்து அடுத்த வாரம் கொழும்பு கடற்பரப்பில் பாரிய ஒத்திகை பயிற்சியில் ஈடுபடவுள்ளதாகவும் -

இந்த ஒத்திகை மூலம் கடற்படையின் திறமையை அதிகரிக்கவும், இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையிலான உறவை விஸ்தரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய கடலோர காவற்படையும், இலங்கை கடற்படையும் இணைந்து நடத்தவுள்ள இந்த ஒத்திகைப் பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. இந்த ஒத்திகை குறித்து கொழும்பிலுள்ள இந்திய தூதரக பாதுகாப்பு அதிகாரியான கப்டன் சுராஜ் பேரி கருத்துத் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)



பயிற்சியில் ஈடுபடவுள்ள இந்தியக் கடற்படைக் கப்பல்கள்

## புளொட் அலுவலகம் மீது யாழ்.நகரில் கிரனேட் வீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள புளொட் அமைப்பின் அலுவலகம் நேற்றிரவு இனந்தெரியாதவர்களின் கிரனைட் தாக்குதலுக்கு இலக்கானதாக யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றிரவு சுமார் 8.20 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இரண்டு கிரனைட்டுக்கள் அலுவலகத்தை நோக்கி வீசப்பட்டதாகவும் இதில் ஒன்று வெடித்ததாகவும் மற்றையது வெடிக்காத நிலையில் காணப்பட்டதால் இராணுவத்தின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு சென்று வெடிக்கவைத்ததாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், இந்தச் சம்பவத்தில் புளொட் அமைப்பினர் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லையெனவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

குறித்த புளொட் அலுவலகம் முன்னர் வேம்படி வீதியில் இருந்தபோதிலும், கிரனைட் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் அதற்கு இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இதன்பின்னர் 51 ஆவது பிரிகேட் மற்றும் பொலிஸ் நிலையம் அமைந்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு அருகில் மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு நகரில் நேற்றும் கிரனேட் வீச்சு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வெளியே அரசடி சந்திக்கு அண்மையிலுள்ள சட்டத் தரணியொருவரின் இல்லம் மீது நேற்று மாலை 6.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டது.

இந்த சம்பவத்தின் போது சட்டத்தரணி அலுவலகத்தின் மேல் மாடியில் இருந்துள்ளார். வெடித்துச் சிதறிய கைக்குண்டினால் அலுவலகம் சிறு சேதம் அடைந்தது.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய நபர் கைக்குண்டை அலுவலகத்தின் உள்ளே உருட்டி விட்டு சென்றுள்ளார்.

இது தொடர்பாக சட்டத்தரணி சர்வானந்தா மட்டக்களப்பு பொலிஸில் புகார் செய்துள்ளார்.

இதேவேளை நேற்றிரவு ஓட்டமாவடியில் முகமது அலியார் சேகு இஸ்மாயில் என்பவரின் வீட்டின் மீது இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்துக்கு

# எஸ்.பியை அழைத்துவராவிடின் நாட்டில் அரசியல் கலகம் ஏற்படும்

## சபையில் மஹிந்த விஜேசேகர எச்சரிக்கை

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு குற்றத்துக்காக இரண்டுவருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினராக எஸ்.பி. திஸநாயக்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த விஜேசேகர நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

நேற்று நாடாளுமன்றம் சபாநாயகர் எம். லொக்குபண்டார தலைமையில் கூடியபோது விசேட உரையாற்றிய அவர் -

நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் மட்டும்தான் மன்னிப்பு வழங்கமுடியும்.

எஸ்.பி.திஸநாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள் சார்பாகவும் இந்த வேண்டுகோளை விடுக்கின்ற அதேவேளை,

எஸ்.பி.திஸநாயக்க இப்படியான வேண்டுகோளை விடுக்கவேண்டாம் என ஏற்கனவே என்னிடம் கேட்டிருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொது நிகழ்ச்சிகளில் சிங்கக்கொடி கட்டாயம்

## அரசாங்கம் கடும் உத்தரவு

(கொழும்பு)

நாட்டில் எந்தப் பகுதியிலும் இடம்பெறும் பொது வைபவங்களில் தேசியக்கொடிஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்படவேண்டும் என்று கட்டாய நிபந்தனை விதிக்க அரசாங்கம் தீர்மானம் எடுத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குத்துறை அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவிற்கு அனுப்பப்பட்டுள்ள உத்தரவுக் கடிதத்தில் நாட்டின் அனைத்துப் பகுதியிலும் உள்ள அரச ஸ்தாபனங்களில் இடம் பெறும் நிகழ்ச்சிகளில் தேசியக் கொடிஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்படாவிட்டால் அந் நிகழ்ச்சிகளைத் தடுத்துநிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த்தேசியக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈ.என்.டி.எல்.எப். ஐ பாதுகாக்கவே இந்திய புலனாய்வுத்துறை ஏற்பாடு

## கைது செய்ததாக கூறியது நாடகமே!

(சென்னை)

ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்துக்கும் இந்திய புலனாய்வுத்துறைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை வெளிக்காட்டும் நோக்கிலேயே பரந்தன் ராஜன் உள்ளிட்ட 9 ஈ.என்.டி.எல்.எவ். இயக்க உறுப்பினர்களை இந்திய பொலிஸார் கைதுசெய்ததாக செய்தி வெளியிடப்பட்டதாகவும் -

இவர்களைப் பாதுகாப்பான மறைவிடம் ஒன்றுக்கு மாற்றி மேற்படி அமைப்பிற்கு புத்துயிரூட்டும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் இந்திய செய்திகள் தெரிவித்தன. தமிழ் தேசிய விரோத அமைப்பான ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பினருக்கும் கருணாவின் சதியின் பின்னணியில் இந்திய உளவுப்பிரிவிற்கும் தொடர்பு இல்லை என்று ஒரு போலியான தோற்றத்தை ஏற்படுத்தும் தீவிரட பற்சியில் இந்திய உளவுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி, வலிகாமம், தீவக
# வலய பாடசாலை நூலகங்களுக்கு
# 13,14, திகதிகளில் நூல் விநியோகம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் நூலகக் கற்றல் வள நிலையச் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் மாகாணக் கல்வித் திணைக்கள நூலக அபிவிருத்திப் பிரிவுக்கு வழங்கப்பட்ட நூல்கள் அடங்கிய பொதிகள் யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

இந்த நூல் பொதிகளை பெற்றுக்கொள்ள வருகை தரும் அதிபர்கள் நூலகப் பொருட் பதிவேட்டையும், பதவி முத்திரையையும் தவறாது எடுத்துவருமாறு மாகாண நூலக இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ந.அனந்தராஜ் கேட்டுள்ளார்.

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த பின்வரும் பாடசாலைகளுக்கு எதிர்வரும் 13ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை வலயக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளதால் அதிபர்கள் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நூற்பொதிகள் வழங்கப்படவுள்ள பாடசாலைகளின் விபரம் வருமாறு -

செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, குடத்தனை அ.த.க பாடசாலை, தாளையடி றோ.க.த.க பாடசாலை, அம்பன் அ.மி.த.க. பாடசாலை, நாகர்கோயில் ம.வி., வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், மணற்காடு றோ.க. த.க. பாடசாலை, மருதங்கேணி இ.த.க பாடசாலை, நாகர்கோயில் அ.மி.த.க பாடசாலை, ஆழியவளை சி.சி.த.க பாடசாலை, சிதம்பராக் கல்லூரி, தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி. பொலிகண்டி இ.த.க பாடசாலை, வல்வை சிவகுரு வித்தியாலயம், கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, அல்வாய் அம்பாள் வித்தி, அல்வாய் சிறிலங்கா வித்தி, கலட்டி றோ.க. த.க பாடசாலை, பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி, சென். தோமஸ் றோ.க.பெ.பாடசாலை, தும்பளை சைவப்பிரகாச வித்தி, புற்றளை ம.வி., புலோலி மெ.மி. த.க. பாடசாலை, வேலாயுதம் ம.வி., அல்வாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி, கரணவாய் ம.வி., இமையாணன் த.வித்தி, யாக்கரு விநாயகர் வித்தி, கம்பர்மலை வித்தி, கப்பூது ஏகாபரம் வித்தி, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயம், வல்வெட்டி இந்து த.வித்தி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் அதிபர்கள் தமது நூல் பொதிகளை 14 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பளை மத்திய கல்லூரியில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வலயத்திற்குரிய பாடசாலைகளுக்கான நூல் பொதிகள் 13 ஆம் திகதி காலை 11.00 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை மருதனார்மடத்தில் அமைந்துள்ள வலிகாமம் வலயக்கல்விப் பணிமனையில் விநியோகிக்கப்படவுள்ளது.

நூல் பொதிகள் விநியோகிக்கப்படவுள்ள வலிகாமம் வலய பாடசாலைகள் பின்வருமாறு -

ஏழாலை ம.வி., சுன்னாகம் மயிலணி சைவவித்தி, இணுவில் இந்துக்கல்லூரி, உடுவில் மான்ஸ் ம.வி., குப்பிழான் விக்னேஸ்வரா ம.வி, ஏழாலை சைவ மகாஜனா வித்தி, தாவடி இ.த.க பாடசாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தி, ஏழாலை சிறிமுருகன் வித்தி, கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி, அராலி இந்துக்கல்லூரி, அராலி சரஸ்வதி ம.வி., வயாவிளான் ம.ம.வி, பண்ணாகம் மெய்கண்டான் வித்தி, சுழிபுரம் வடக்கு, ஆறுமுகம் வித்தி, மூளாய் வடக்கு சைவப்பிர காச வித்தி, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, வட்டு. திருநாவுக்கரசு வித்தி, சித்தங்கேணி சிறிகணேசா வித்தி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சில்லாலை றோ.க.த.க. பாடசாலை, பண்டத்தரிப்பு ஜசீந்தா றோ.க.த.க பாடசாலை, பிரான்பற்று கலைமகள் வித்தி, இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி, புனித ஹென்றி அரசர் கல்லூரி, சென்.ஜோசப் ம.வி., நுணசை வித்தி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நவாலி ம.வி., ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வி, ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை, சென்.ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை, சுதுமலை வடக்கு த.ம.வி, சுதுமலை சின்மய பாரதி வித்தி, நடேஸ்வரா கல்லூரி, அருணோதயக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் ம.வி., வீமன்காமம் ம.வி., காங்கேசன்துறை ம.வி., கட்டுவன் புலம் ம.வி., கீரிமலை நகுலேஸ்வரா ம.வி., பொன் பரமானந்தர் வித்தி, மயிலிட்டி வடக்கு, கலைமகள் வித்தி, அளவெட்டி, அருணாசலம் வித்தி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, மயிலிட்டி றோ.க. த.க பாடசாலை, தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தி குட்டியபுலம் அ.த.க.பாடசாலை.

தீவகம் வலயத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் வேலணையில் அமைந்துள்ள தீவக வலயக்கல்விப் பணிமனையில் 13 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி தொடக்கம் 4.30 மணி வரை தமக்குரிய நூல் பொதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

தீவக வலயத்தில் நூல் பொதிகள் வழங்கப்படவுள்ள பாடசாலைகள் பின்வருமாறு -

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி, நெடுந்தீவு றோ.க.மகளிர் பாடசாலை, புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பன் சண்முகானந்தா ம.வி, கரம்பன் சிறிய புளிய மகளிர் ம.வித்தி, அனலைதீவு சதாசிவ ம.வி, நாரந்தனை றோ.க.ம.வி மகளிர் பாடசாலை, நாரந்தனை கணேசா வித்தி, தம்பாட்டி அ.த.க பாடசாலை, எழுவைதீவு முருகவேல் வித்தி, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி, வியாவில் சைவ வித்தி, புங்குடுதீவு ம.வி. புங்குடுதீவு கணேச ம.வி, புங்குடுதீவு சித்தி விநாயகர் ம.வி, நைனாதீவு சிறி கணேசா கனிஷ்ட வித்தி, புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி, சிறி சுப்பிரமணியர் மகளிர் வித்தி, மண்டைதீவு ம.வி., வேலணை கிழக்கு ம.வி, சரவணை நாகேஸ்வரி ம.வி, வேலணை சைவப்பிரகாச வித்தி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி, வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.

நூல் பொதிகள் விநியோகம் செய்யப்பட்டமைக்கான பொருட் பதிவேட்டுப் பத்திரங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு உடனடியாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்பதால் உரிய நேரத்தில் அதிபர்கள் வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைக்கிள் அன்பளிப்பு

நல்லூர் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் விசேட தேவைகளுக்குரியவர்களைக் கவனிக்கும் கிராம மட்ட சமூகத் தொண்டர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினர் ஏழு துவிச்சக்கரவண்டிகளை நல்லூர் பிரதேச செயலர் ஊடாக நேற்று அன்பளிப்புச் செய்துள்ளனர். (63)

## பொது விரிவுரைத் தொடரில் இன்று

மதக் கல்வியியல் புதிய கருத்துக்கள் பொது விரிவுரைத் தொடரில் இன்று மாலை 3 மணிக்கு புவியியல்துறை மண்டபத்தில் அரச அறிவியல் மற்றும் சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் ந.சண்முகலிங்கன் 'ஈழத்தமிழர் மத்தியில் பௌத்தம்' என்ற பொருளில் விரிவுரை நிகழ்த்துவார்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் நிகழ்வு இன்று காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை கொக்குவில் மேற்கு காந்தி சனசமூக நிலையத்திலும், மதியம் 1.30 மணி தொடக்கம் 3.30 மணி வரை கொக்குவில் பிடாரி அம்மன் சனசமூக நிலையத்திலும் நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (63)

## மனித உரிமைகள் கருத்தரங்கு

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோத்தர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பாக கருத்தரங்கு நாளை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகவும் இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்தார். (63)

## திருக்குறள் மனனப் போட்டியில் சாதனை படைத்த சகோதரிகள்!



யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் ஏழாலை புனித இசிதோர் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவிகளான க.கஜவாணி, க.அபிராமி ஆகியயோர் முதல்நிலையில் சித்தி யடைந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் சகோதரிகள், யாழ்.கல்வி வலயம் நடத்திய திருக்குறள் மனனப் போட்டியில் இவர்கள் ஐந்நூறுக்கும் மேற்பட்ட திருக்குறளை மனனஞ்செய்து போட்டியில் வென்று சாதனை படைத்துள்ளனர்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்டது)
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30 (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 [பு.நே]
ஆங்கிலப்படம்
VANHELSING (நகுல படம்)
(சி-3319)

திறைஞ்சனாஸ் சங்கானை
இன்று முதல்
சரத்குமார், நிகிதா நடித்த
சத்ரபதி (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
SPIDER MAN - 2
(சி-2723)

ராஜா யாழ்ப்பாணம்.
5 முதல் 9 வரை
சிறுவர்களுக்கான சிறந்த ஆங்கிலச் சித்திரம்.
SPIDERMAN-2
புதிய நேரம்: 10.30, இரவு 9.30, மட்டும்
ஸ்ரீகாந், சினேகா, கலாபவன்மணி நடித்த
போஸ்
புதிய நேரம்: 2.30, 6.30, மட்டும் (ரீல்ஸ்)
(சி-3319)

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
அட்டகாசம்
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
அடுத்த வெளியீடு
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
அர்ஜின், லைலா, வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா

## இரசாயன புதிர்போட்டியில் சிறந்த பெறுபேற்றை பெற்றவர்கள்

தேசிய அவுஸ்ரேலிய இரசாயனவியல் புதிர்போட்டியில் பங்குபற்றிய யாழ்.இந்துக்கல்லூரி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர்.

தரம் 12இல் கல்விகற்கும் சிவப்பிரகாசம் மயூரன் அதிவிசேட பெறுபேற்றையும் தரம் 11இல் கல்வி கற்கும் தளையசிங்கம் அஜந்தன் இரண்டாவது அதிவிசேட பெறுபேற்றையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் எதிர்வரும் 28 ஆம் திகதி 8.30 மணிக்கு கொழும்பு விஜயராம மாவத்தையில் நடைபெறவுள்ளது.

## வீதியைக் கடந்த மாணவியை மோட்டார் சைக்கிள் மோதியது

வீதியை கடக்க முயன்ற பாடசாலை மாணவி மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் படுகாயமடைந்த சம்பவம் நேற்று மட்டுவில் கமலாசினி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதில் சரசாலை தெற்கைச் சேர்ந்த கனகரட்ணம் சயன்சியா (வயது 11) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (29)

## மதிப்பீட்டு பட்டியல் வழங்கப்படுகிறது

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நடைபெற்ற தரம் - 9 ஆண்டிறுதிப் பரீட்சை தரம் - 11 மாவட்டமட்ட பரீட்சை ஆகியவற்றுக்கான புள்ளி மதிப்பீட்டுப் படிவங்கள் வலயக்கல்வி அலுவலகத்தினால் விநியோகிக்கப்படுகின்றன.

இந்தப் படிவங்களினை பெற்றுப் பூர்த்திசெய்து உடன் அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (29)

## திருக்குறள் மனனப்போட்டி பரிசளிப்பும் சாதனையாளர் விருது வழங்கலும்

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும், சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 2.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் புரவலர் இந்திரன் காராளசிங்கம் முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார்.

யாழ்.மாவட்ட தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த செல்வி தி.பெரியதம்பி, வலயக் கல்விப் பணிப்பாளர்களான றெஜினா இருதயநாதன், வே.தி.செல்வரட்ணம், வே.மகேந்திரன், வ.செல்வராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் க.பொ.த. உயர்தரப் பாட ரீதியாக யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற புனித பரியோவான் கல்லூரி உயிரியல் பிரிவு மாணவன் ச.சயந்தன், இந்துக்கல்லூரி கலைப்பிரிவு மாணவன் ச.றமணன், புனித பத்திரிசியார் கல்லூரி வர்த்தகப் பிரிவு மாணவன் அ.சரத்குமார், யாழ். இந்துக் கல்லூரி கலைப்பிரிவு மாணவன் கு.குருபரன் ஆகியோரும்,

க.பொ.த. சா.தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற வேம்படி மகளிர் கல்லூரி மாணவி தர்சனா குகதாஸ், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் இ.பிரணவன் தேசிய மட்டக் குண்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தினைப்பெற்ற கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவி கு.தர்சினி,

தமிழ்த் தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றவர்களின் விபரம் -

வாசிப்பு - த.கோகுலன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), கவிதை ஆக்கம் - அ.அனுசானி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), இசை தனி - கு.ஜெகதீசன் (யூனியன் கல்லூரி), இசை தனி - வி.ஜீவிகா (யூனியன் கல்லூரி), இசை குழு - வேம்படி மகளிர் கல்லூரி, நாட்டிய நாடகம் - இந்து மகளிர் கல்லூரி, வில்லுப்பாட்டு திறந்தபோட்டி - யாழ்ப்பாணக் கல்லூரி, நாடகம் திறந்த போட்டி - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தமிழ் அறிவு வினாவிடை - தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகிய மாணவர்கள், பாடசாலைகள் பரிசில்களைப் பெறவுள்ளன.

## கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

(தென்மராட்சி)

நுணாவில் பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கு உயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து வருகின்ற கட்டாக்காலி கால்நடைகள் அங்குள்ள பயிர்களை நாசப்படுத்துகின்றன என நுணாவில் மத்திய விவசாய சம்மேளனம் யாழ் அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

நுணாவில் பகுதியில் தாம் பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்வேளை உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள கட்டாக்காலிகள் இரவு நேரங்களில் வயல்பகுதிக்குச் சென்று பயிர்களை சேதப்படுத்தி விட்டு செல்கின்றன. இதனால் விவசாயிகள் தமது செய்கைகளை முன்னெடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதற்கு அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தமக்கு சுமுகமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மட்டக்களப்பு சிங்கள வாடியிலுள்ள

# ரெலோ செயலாளரின் கடைமீது இனந்தெரியாதோர் குண்டுத்தாக்குதல்

ரெலோ செயலாளர் பிரசன்னா இந்திரகுமாரின் வியாபார நிலையம் மீது, நேற்றுமுன்தினம் காலை 6.10 மணியளவில் குண்டுத் தாக்குதலொன்று நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு சிங்கள வாடியிலுள்ள வன்னியனார் தெருவிலுள்ள இவரது கடைக்குச் சென்ற இரண்டு நபர்கள் - கடையிலிருந்த விநாசி கந்தசாமி என்பரை அங்கிருந்து வெளியேற்றி விட்டு, குண்டு வீச்சை மேற்கொண்டனர்.

இதனால் வியாபார நிலையம் பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தின்போது, பிரசன்னா இந்திரகுமார் அவரது மனைவி, பிள்ளைகள் ஆகியோர் வியாபார நிலையத்துடன் இணைந்த வீட்டில் தங்கியிருந்தனர். இது தொடர்பாக போர் நிறுதத கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த வருடமும் இவ்வாறான தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தனது வியாபார நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் சம்பவத்தின் சூத்திரதாரிகளையும், அதன் பினனணியையும் மக்கள் அடையாளம் காண்பார்கள் என ரெலோ செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமார் கூறியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் -

வியாபார நிலையம் மீது இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளபபட்ட கைக்குண்டுத் தாக்குதலில், சுமார் 2 லட்சம் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்துக்கான அரசியல் கொள்கைக்கு எதிரான சக்திகளால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே இதனை நான் கருதுகிறேன்.

இதற்கு யார் பொறுப்பு? இதற்கான பின்னணி என்ன என்பதை நான் கூறுவதைவிட, மக்கள் அதனை நன்கு அறிவார்கள் எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவரது உறவினரான விநாசி கந்தசாமி தகவல் தெரிவிக்கையில் -

வழமைபோல் காலையில் வியாபார நிலையத்தை திறப்பதற்கு முன்பு இறைவழிபாட்டுக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். காலை 5.50 மணியளவில் இரண்டு இளைஞர்கள் வியாபார நிலைய கதவினை தட்டும் சத்தம் கேட்டது. அவர்கள் பொருடகள் வாங்க வந்தவர்கள் போல் காணப்பட்டனர்.

கதவின் ஒரு பகுதியை திறக்க, உள்ளே நுழைந்த அவர்கள் என்னை வெளியேறுமாறு கூறினார்கள். நான் மறுத்தபோது, இழுத்து வெளியே தள்ளிவிட்டனர். நான் மீண்டும் உள்ளே செல்ல முற்பட்டபோது, ஒருவர் கைக குண்டைக் காட்டினர். வந்தவர்களில் ஒருவர் லாச்சியைத் திறந்து, அங்கிருந்த பணத்தை எடுத்துக்கொண்டார். அவர் வெளியே வர, மற்றவர் கைக் குண்டை வீசி விட்டு, சாதாரணமான முறையில் வெளியேறிச் சென்றனர் என அவர் தெரிவித்தார்.

### மட்டக்களப்பு சிறையிலிருந்து

# கைதியொருவர் தப்பியோட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து தண்டனைக் கைதியொருவர் நேற்றுமுன்தினம் காலை தப்பிச் சென்றுள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த கணபதி கந்தசாமி என்ற கைதியே இவ்வாறு தப்பிச் சென்றவராவார்.

கொலை முயற்சிக் குற்றமொன்றின் பேரில் கடந்த 3 மாதங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக இவர் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் காலை சிறைச்சாலை உட்புறத்தில் வழமையான வேலைகளில் ஏனைய கைதிகளுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் இவர் தப்பிச் சென்றுள்ளார்.

சிறைச்சாலை திருத்தப் பணிகளுக்காக முன்பக்கச் சுவர்கள் இடிக்கப்பட்டிருப்பதைச் சாதகமாகப் பயனபடுத்தியே இவர் தப்பிச் சென்றதாகத் தெரியவருகிறது.

கடந்த 3 வார காலத்திற்கு முன்பும் இவர் தப்பிச்செல்ல முயற்சிகள் மேற்கொண்டாரென சிறைச்சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற அங்கத்துவத்தையும் இழந்தார் எஸ்.பி.திஸநாயக்கா



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி. திஸநாயக்காவுக்கு உயர் நீதிமன்றம் இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்ததையடுத்து, அவரது நாடாளுமன்ற அங்கத்துவமும் இழக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் யாப்பின்படி, உயர் நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் 7 வருடங்களுக்கு அரசியல் உரிமைகளையும் இழந்து விடுவார்.

இதன்படி எஸ்.பி.திஸநாயக்காவும் தனது அரசியல் உரிமைகளை இழந்துள்ளார்.

இதன் காரணமாக குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் எந்தவொரு தேர்தலிலும் அவர் போட்டியிட முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் இழக்கப்படுவதையடுத்து, இவரது இடத்துக்கு நுவரெலியா மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலில் விருப்பு வாகக அப்படையில் அடுத்த இடத்திலுள்ள திருமதி ரேணுகா ஹேரத் தேர்தல் ஆணையாளரால் நியமிக்கப்படுவார்.

இருப்பினும், எஸ்.பி.திசாநாயக்காவின் மனைவி தாமரா திஸநாயக்காவை நாடாளுமன்றத்துக்கு கொணடு வர வேண்டும் என்பதில் ஐ.தே.க.வில் ஒரு சாரார் தீவிரமாக இருக்கின்றனர்.

அப்படி அவரைக் கொண்டு வருவதென்றால், தேசிய பட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலகவேண்டும் அல்லது நுவரெலியா மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் பட்டியலிலுள்ள தெரிவு செய்யப்படாத ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் அதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். இதனைத் தவிர வேறு வழியில்லை.

எஸ்.பி.திஸநாயக்காவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து, ஹங்குராங்கொட தொகுதியிலுள்ள அவரது ஆதரவாளர்கள் கொதிப்படைந்துள்ளனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாக வருவதற்கும், அவரது தலைமையில் பொதுஜன முன்னணி ஆட்சி அமைப்பதற்கும், ஜனாதிபதிக்கு வலதுகரமாகத் திகழ்ந்த எஸ்.பி.திஸநாயக்கா - 1994 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரை அந்த ஆட்சியில் முக்கிய அமைச்சரொருவராக விளங்கினார்.

1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதியுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக சில நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வெளியேறி, ஐ.தே.க. வில் இணைந்து 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஆட்சியை வீழ்த்தினார்.

இதனையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும், எஸ்.பி.திசாநாயக்காவும் அரசியலில் கீரியும், பாம்பும் ஆனார்கள்.

### இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு விலகல் சான்றிதழ் வழங்குதல் நிகழ்வு

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை சட்டரீதியாக இராணுவத்திலிருந்து விலக்குவதற்கு எதிர் வரும் மார்ச் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தின் பின்னரும் பதவி விலகாது தப்பியோடி இருப்பவர்கள் கைது செய்யப்பட்டு, அவாகள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இராணுவத்திலிருந்து தப்பியோடியோர் எண்ணிக்கை 75 ஆயிரம் என இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (தே)

### தேசியப் பிரச்சினையைத் தீர்க்க

# அரசு முன்வருமாக இருந்தால் ஐ.தே.கட்சி ஆதரவு வழங்கும்!

## பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

நாடு தற்போது எதிர்நோக்கும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அரசாங்கம் இதய சுத்தியுடன் முன்வருமானால், அதற்கான ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக உள்ளதாக, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகான, அரசு நேர்மையாக முன் வருமாக இருந்தால், நாம் ஆதரவை வழங்கத் தயாராகவே உள்ளோம். ஆனால், எமது கட்சியின் உறுப்பினர்களுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுமானால், எம்மிடம் இருந்து எவ்விதமான ஆதரவும் கிடைக்கமாட்டாது.

ஜனாதிபதி சந்திரிகா அரசியல் யாப்பை மாற்றம் செய்து, மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதி பதவியை கைப்பற்றும் நோக்கில் முழுமுனைப்புடன் ஈடுபட்டு வருகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி மக்களுக்கு மூன்றுவேளை உணவுகளைத் தருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்தத் தருணத்தில், ஜனாதிபதி மூன்றாவது முறையாகவும் பதவியை தக்கவைப்பதில் முழுமுயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

ஜனாதிபதியின் இந்த முயற்சியை முறியடிக்க நாம் எமது ஆதரவாளர்கள் சகிதம் வீதிப் போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபடவுள்ளோம் எனத் தெரிவித்தார்.

### மருத்துவமனைகளுக்கான

# ஜப்பான் அரசின் நிதியுதவி திரும்பிச் செல்லும் அபாயம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும், பராமரிப்புச் செலவினங்களுக்காகவும் ஜப்பான் வங்கி உதவிச் செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 13 கோடி ரூபா பயன் படுத்தப்படாமையால், மீண்டும் ஜப்பான் வங்கியிடம் கையளிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுகாதார அமைச்சின் கேள்வி கோரல்களில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாகவே இந்த நிதி திரும்பிச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் பல குறைபாடுகள் நிலவிவருகின்ற இந்த நேரத்தில், இந்த நிதி திரும்பிச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# 14,628 பட்டதாரி பயிலுநர்களை ஆசிரியர் சேவையில் இணைக்க முடிவு

பட்டதாரிகளை அரச சேவையில் இணைக்கும் திட்டத்தின் கீழ், நாடளாவிய ரீதியில் பயிற்சிபெற்று வரும் பட்டதாரிகளில், 14 ஆயிரத்து 628 பேரை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இவர்களில் 3191 பேருக்கு தேசிய பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமனம் வழங்குவதற்கும், ஏனையவர்களை மாகாண மட்டத்தில் ஆசிரியர்களாக நியமிப்பதெனவும் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு - கிழக்கில் தமிழ்மொழி மூலம் 1864 பேரும், சிங்கள மொழி மூலம் 554 பேரும் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

மேல் மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் 188 பேரும், சிங்கள மொழி மூலம் 1396 பேரும்,

மத்திய மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் 815 பேரும், சிங்கள மொழி மூலம் 931 பேரும்,

தென்மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் 78 பேரும், சிங்கள மொழி மூலம் 1238 பேரும்,

வடமேல் மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் 288 பேரும், சிங்கள மொழி மூலம் 1181 பேரும்,

வடமத்திய மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் 136 பேரும், சிங்கள மொழி மூலம் 789 பேரும்,

ஊவா மாகாணத்தில் தமிழ் மொழி மூலம் 262 பேரும், சிங்கள மொழி மூலம் 628 பேரும்,

சப்பிரகமுவா மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் 215 பேரும், சிங்கள மொழி மூலம் 894 பேரும் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

# புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலிலிருந்து நாட்டைப் பாதுகாக்க ஜனாதிபதி தவறிவிட்டதாக, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் -

இராணுவத்தின் புலனாய்வுத்துறையினர் பலர் - விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். தற்பொழுதும் கொல்லப்பட்டு வருகின்றனர். இதனால், நாடு பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது.

ஆனால், நாட்டின் தலைவியாக உள்ள ஜனாதிபதியோ அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ண சிறிவிக்கிரமநாயக்கவோ அல்லது முப்படைத் தளபதிகளோ இந்த அச்சுறுத்தலிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

படையினரின் புலனாய்வு அதிகாரிகள் அனைவரும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டு விட்டார்கள். உலகிலேயே புலனாய்வாளர்கள் இல்லாத இராணுவம் இலங்கை இராணுவமே ஆகும் என அவர் தெரிவித்தார்.

### அடுத்த வாரம் முதல் ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு

எதிர்வரும் வாரம்முதல் ரயில் கடடணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

முதலாம் வகுப்புக்குரிய கட்டணம் 90 வீதத்தாலும், இரண்டாம் வகுப்புக் கட்டணங்கள் 27 வீதத்தாலும், மூன்றாம் வகுப்புக் கட்டணங்கள் 24 வீதத்தாலும் அதிகரிக்கப்படவுள்ளன.

எரிபொருள் விலைகளின் அதிகரிபபால் புகையிரதத் திணைக்களத்துக்கு மாதமொன்றுக்கு 90 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படுகிறது. இதனாலேயே கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளளது. (தே)

# தமிழகம் சென்ற அகதிகள் தனுஷ்கோடியில் தலைமறைவு

இலங்கையிலிருந்து படகு மூலமாக தனுஷ்கோடிக்குச் சென்று, தலைமறைவான 9 பேரையும் தமிழகப் பொலிஸார் தேடிவருகின்றனர்.

இலங்கையில் தற்போது போர்நிறுத்தம் உள்ளதால் தமிழக அகதி முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் பலர் படகில் இலங்கைக்கு திரும்புவது தொடர்கிறது. இந்த நிலையில் இலங்கையிலிருந்து 9 பேர் நேற்றுமுன்தினம் தனுஷ்கோடிக்கு வந்ததாகவும், இவ்வாறு வந்தவர்களில், அங்கு மறைந் திருந்த இருவரை கைதுசெய்து விசாரணை செய்தபோது இவர்கள் சகோதரர்கள் எனவும் பெயர் ரூபன் (வயது-32), செல்வா (வயது 32) எனவும் சேலம் முகாமில் தங்கியிருக்கும் தமது உறவினர்களைப் பார்ப்ப தற்காகவே அங்கு வந்ததாகப் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

இவர்கள் ஒவ்வொருவரும் படகுக் கட்டணமாக 8 ஆயிரம் ரூபாவரை செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நியூஸிலாந்துடனான

# இரண்டாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணிக்கு வெற்றி!



(சிட்னி)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான சப்பல்-ஹட்லி கிண்ணத்துக்கான தொடரின் இரண்டாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலியாவுக்கான சுற்றுப்பயணம் செய்துள்ள நியூஸிலாந்து அணி முதலாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று பகல் - இரவு ஆட்டமாக இரண்டாவது போட்டி சிட்னியில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்பத்திலிருந்தே அவுஸ்ரேலிய தொடக்க வீரர் கில்கிறிஸ்ட் அபாரமாக அதிரடி ஆட்டம் ஆடினார். இதனால் மளமளவென



அணியின் ஸ்கோர் உயர்ந்தது.

அணியின் ஸ்கோர் 86 ஆக உயரும் வரை நியூஸிலாந்து வீரர்களால் தொடக்க ஜோடியைப் பிரிக்க முடியவில்லை. முதல் விக்கெட்டாக கில்கிறிஸ்ட் வீழ்த்தப்பட்டார்.

48 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 60 ஓட்டங்களைக் குவித்திருந்த கில்கிறிஸ்ட் ஸ்ரைரிஸின் பந்துவீச்சில் அஸ்ரிலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பொண்டிங் களமிறங்கி ஹைடனுடன் இணைந்து ஆடினார். ஆயினும் அணியின் ஸ்கோர் 140 ஆக இருந்தபோது பொண்டிங் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 36 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்ற இவர் மில்ஸின் பந்துவீச்சில் பிளெமிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.

அடுத்து மார்ட்டின் களமிறங்கிய நேரத்தில் ஹைடனின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. 65 பந்துகளில் 2 பவுண்டரிகளுடன் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த இவர் ரன் அவுட்டானார்.

ஸ்கோர் 148 ஆக இருந்த போது மார்ட்டின் 5 ஓட்டங்களுடன் மில்ஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அதே ஸ்கோரில் இருந்தபோதே சைமன்ஸ் ஓட்டமெதையும் பெறாமல் வெற்ரோறியின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக கிளார்க் 6 ஓட்டங்களுடன் கெயின்சின் பந்துவீச்சிலும், லீமன் 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

50 ஓவர் நிறைவில் அவுஸ்ரேலிய அணி 7 விக்கெட் இழப்புக்கு 261 ஓட்டங்களைப் பெற்றது. ஆட்டநேர முடிவில் ஹொக் 41 ஓட்டங்களுடனும், லீ 16 ஓட்டங்களுடனும்



ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து நியூஸிலாந்து அணி ஆட்டத்தைத் தொடங்கியது. அணியின் ஸ்கோர் 27 ஆக இருந்தபோது அஸ்ரில் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை லீ வீழ்த்தினார்.

பிளெமிங்குடன் சின்கிளெயர் இணைந்து ஆடிக்கொண்டிருந்தபோது - அணியின் ஸ்கோர் 63 ஐ எட்டியது. அவ்வேளை சின்கிளெயரின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. இவர் 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

இதன் பின்னர் ஸ்ரைறிஸ் 5 ஓட்டங்களுடனும், பிளெமிங் 34 ஓட்டங்களுடனும், ஓரம் 2 ஓட்டங்களுடனும், மார்ஷல் 9 ஓட்டங்களுடனும் - அணியின் ஸ்கோர் 86 ஐ எட்டுவதற்குள் மளமளவென ஆட்டமிழந்தனர்.

இதன்பின்னர் கெயின்ஸும், மக்கலமும் இணைந்து நியூஸிலாந்து அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தனர். 40 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 50 ஓட்டங்களைக் குவித்த கெயின்ஸ், ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் வெற்ரோறி களமிறங்க, மக்கலம் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதனையடுத்து வெற்ரோறியுடன் - மில்ஸ் இணைந்து அபாரமாகவும், அதிரடியாகவும் ஆடி ஓட்டங்களைக் குவித்தார்.



இதனால் இரண்டாவது போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி தோல்வியடைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. எனினும் எதிர்பாராத விதமாக வெற்ரோறி ரன் அவுட்டானதால் நியூஸிலாந்தின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்பட்டது.

இவர் 36 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இவரது விக்கெட் வீழ்ந்த பின்னர் ஹரிஸ் களமிறங்கினார். இவர் 48 ஆவது ஓவரில் மக்ராவின் பந்துவீச்சில் தோளபட்டையில் காயமுற்றார்.

இதன் பின்னர் 4 ஓட்டங்களுடன் இவர் ஆட்டமிழந்ததால் நியூஸிலாந்து அணி 17



ஓட்டங்களால் தோல்விகண்டது.

244 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்த நியூஸிலாந்து அணியில்-மில்ஸ் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் 26 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 1 பவுண்டரியுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் ஹொக் 3, லீ 2, ஜிலெஸ்பி 2, மக்ரா 1, சைமன்ஸ் 1 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## தென்னாபிரிக்க அணியில் மீண்டும் நிக்கி போயே!



இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையே நடைபெறும் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணியில் போயே மீண்டும் சேர்க்கப்பட்டார்.

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டது. சுழல்பந்து வீச்சாளர் நிக்கி போயே மீண்டும் அணிக்குத் திரும்பி இருக்கிறார். சூதாட்ட விசாரணைக்கு பயந்து இந்திய சுற்றுப்பயணத்துக்கான அணியில் இருந்து போயே விலகினார்.

இந்திய பயணத்தை புறக்கணித்த முன்னணி ஆட்டக்காரர் கிப்ஸ் மீண்டும் அணியில் சேர்க்கப்படவில்லை. கைவிரல் காயம் காரணமாக அவதிப்பட்டு வரும் கிப்ஸ் இன்னும் முழுமையாக குணம் அடையவில்லை என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

இது தவிர டேல் ஸ்டென், டிவில்லியர்ஸ் ஆகியோர் முதல்முறையாக அணியில் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். சிம்பாப்வே அணிக்கு எதிரான 4 ஒருநாள் போட்டியிலும் எளிதாக வெற்றிபெற்ற இங்கிலாந்து அணிக்கு தென்னாபிரிக்காவில் நிறைய சோதனைகள் காத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

கிரகம் ஸ்மித் (கப்டன்), நிக்கி போயே ஹசீம் அம்லா, ஜாண்டர் டி பிரைன், டிவில்லியர்ஸ், டிப்பென்னர் அன்ட்ரூ ஹோல், ஜக் கலிஸ், மக்காயா என்ரினி, ஷோன் பொலக், ஜக் ருடோல்ப், டேல் ஸ்டென், சொலேகிலி.

## விளையாட்டு

## இந்திய அணியின் பயிற்சியாளர் இப்போதைக்கு நீக்கம் இல்லை!



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ஜோன்ரைட் மாற்றம் செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

ஆனால், பாகிஸ்தான் பயணம் முடியும் வரை ஜோன்ரைட் நீடிப்பார் என்று இந்திய கிரிக்கெட் சபை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய பயிற்சியாளர் நியமிக்கப்படவுள்ளார்.

அவுஸ்ரேலியாவின் முன்னாள் கப்டன் ஸ்ரீவோ இந்திய அணிக்கு பயிற்சியாளராக அதிக ஆர்வத்துடன் இருக்கிறார். எனவே அவர் பணியை தொடர வாய்ப்புள்ளது.



பென்டம் வெயிட் குத்துச்சண்டைப் போட்டியொன்றின் பன்னிரண்டாவது சுற்றில் பனாமா நாட்டு வீரரால் வீழ்த்தப்பட்ட கொலம்பிய குத்துச்சண்டை வீரர் கார்லோஸ் மேசா வீழ்ந்து கிடப்பதையும் இவருக்கு வைத்தியர்கள் அவசர சிகிச்சை அளிப்பதையும் காணலாம்.

இந்தப் போட்டியின்போது ஏற்பட்ட தாக்கங்களால் கார்லோஸ் மேசாவின் மூளை செயலிழந்து விட்டதாக பின்னர் வைத்திய நிபுணர்கள் தமது அறிக்கையில் தெரிவித்தனர்.

# இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேஷ் புறப்பட்டது

கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 20 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்றுக்காலை பங்களாதேஷ் புறப்பட்டுச் சென்றது. அங்கு அந்த அணியுடன் 2 டெஸ்ட மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்திய அணி நேற்றுமுன்தினம் பங்களாதேஷ் செல்ல இருந்தது. அங்குள்ள தீவிரவாத அமைப்பு ஒன்று இந்திய வீரர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தது. இதனைத் தொடர்ந்து இந்திய அணியின் பயணம் ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டது.

பாதுகாப்பு குறித்து பார்வையிடுவதற்காக 5 பேர் கொண்ட பாதுகாப்புக்குழு கடந்த திங்கட்கிழமை டாக்கா சென்றது. போட்டி நடைபெறும் இடங்கள், வீரர்கள் தங்கும் ஹோட்டல்கள் ஆகியவற்றைப் பார்த்து திருப்தி தெரிவித்தது.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் இடையேயான போட்டி அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. இன்று தொடங்க இருந்த முதல் டெஸ்ட் ஒரு நாள் தாமதமாக 10 ஆம் திகதி டாக்காவில் தொடங்கும்.

இதேபோல் 2 ஆவது டெஸ்ட் போட்டி 16 ஆம் திகதி சிட்டகொங்கில் தொடங்கவிருந்தது. இந்தப் போட்டி 17 ஆம் திகதி தொடங்கும். ஆனால் இந்தப் போட்டி சிட்டகொங்கில் நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது போட்டி நடைபெறும் இடம் முடிவுசெய்யப்படவில்லை.

ஒரு நாள் போட்டி நடைபெறும் திகதியில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. முதல் போட்டி சிட்டகொங்கில் நடைபெறும் என்று முன்பு அறிவிக்கப்பட்டது. ஆனால் தற்போது போட்டி நடைபெறும் இடம் முடிவு செய்யப்படவில்லை.

இந்திய - பங்களாதேஷ் அணிகள் மோதும் போட்டியின் மாற்றியமைக்கப்பட்ட அட்டவணை விபரம் வருமாறு -

டிசம்பர் 10-14: முதல் டெஸ்ட் (டாக்கா), டிசம்பர் 17-21: 2 ஆவது டெஸ்ட் (இடம் முடிவாகவில்லை), டிசம்பர் 23: முதல் ஒரு நாள் போட்டி (இடம் முடிவாகவில்லை), டிசம்பர் 26: 2 ஆவது ஒரு நாள் போட்டி (டாக்கா), டிசம்பர் 27: 3 ஆவது ஒருநாள் போட்டி (டாக்கா).







# சக்தி அலுவலகம் தாக்கப்பட்டமை பொலிஸார் தீவிர விசாரணை!

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சக்தி தொலைக்காட்சியின் நேரடி ஒளிபரப்பு அலுவலகம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டமை தொடர்பாக, பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு வீரசிங்கம் மண்டபத்தில் அமைந்துள்ள சக்தி ரீ.வி நேரடி ஒளிபரப்பு நிலையத்துக்கு, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத குழுவினர் காவலாளியை பலமாக தாக்கினர்.

தாக்கிய காவலாளி கத்திய சத்தத்தை கேட்டவுடன் மாடியில் இருந்த சக்தி ரீவி அலுவலர்கள் தப்பிச் சென்றனர். இதனை அடுத்து அந்தக் குழு ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்களை உடைத்து சேதப்படுத்திவிட்டுத் தப்பிச் சென்றது.

சம்பவ இடத்திற்கு பொலிஸார் மற்றும் தடய வல்லுனர்கள் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், சக்தி ரீவி ஒளிபரப்பு யாழ். குடாநாட்டில் தடைப்பட்டுள்ளது. தாக்கப்பட்ட காவலாளி உதயசேகரம் (வயது 40) என்பவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸ் நிலையக் குற்றவியல் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.



றீடோ நிறுவனத்தால் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடத்தப்பட்ட க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில் - கல்லூரி அதிபர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

# ஆட்சேபனை மனுவை சமர்ப்பிக்க ராஜபக்ஷவுக்கு இறுதி தவணை!

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்றத்தில் நடைபெறுகின்ற காணாமல் போனோர் தொடர்பான ஆறு ஆட்கொணர்வு மனுக்களில் முதலாவது எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள லான்ஸ் கோப்ரல் சோமரட்ண ராஜபக்ஷ - இந்தமுறையும் தனது ஆட்சேபனை மனுவைச் சமர்ப்பிக்காததால், ஆட்சேபனை மனுவைச் சமர்ப்பிக்க 2005 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி இறுதித் தவணை வழங்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமற்போனவர்களான புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை நந்தகுமார், பூதத்தம்பி யதீஸ்குமார், கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த பரமு சந்திரசேகரம், அரியாலையைச் சேர்ந்த வர்களான சுப்பிரமணியம் சுதாகரன், நாகமுத்து செல்வரத்தினம், யோகேஸ்வரன் சேரன் ஆகியோரின் ஆட்கொணர்வு மனுக்கள் நேற்றுமுன்தினம் யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் எதிராளிகளான அரியாலை முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த கப்டன் லலித்குமார, முன்னாள் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல சார்பாக ஆட்சேபனை மனுவை அரச சட்டத்தரணி சமர்ப்பித்தார். ஆனால், ராஜபக்ஷ சார்பில் சட்டத்தரணி எவரும் மன்றில் ஆஜராகவில்லை.

இதனையடுத்து ராஜபக்ஷ ஆட்சேபனை மனுவைச் சமர்ப்பிப்பதற்காக மீண்டும் ஒரு தவணையைக் கோரியதன் காரணமாக, இறுதித் தவணையாக 2005 ஆம் ஆண்டு தை மாதம் 05 ஆம் திகதி வழங்கப்பட்டு அன்றைய தினத்துக்கு மேற்படி வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.





யாழ். றோட்டறக் கழகத்தால் கடந்த மாதம் நடத்தப்பட்ட பாடசாலை இன்ரரெட் கழகங்களுக்கிடையிலான வலைப்பந்தாட்ட இறுதி நிகழ்வின் போது கழகத் தலைவர் உரை நிகழ்த்துகிறார். (29)

## ஆசிரிய நூலகர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நூலக அபிவிருத்தி பொப் லெப் செயற்திட்டம் தொடர்பான செயலமர்வு ஒன்று - எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை ஆசிரிய நூலகர்கள், பொப் லெப் செயற்திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோர் இந்தச் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## ஒளி விழா நிகழ்வுகள்!

### யாழ். புனித சென் மேரீஸ்

யாழ். புனித சென். மேரீஸ் வித்தியாலய வருடாந்த ஒளி விழா நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில், அதிபர் எஸ்.செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### யாழ். புனித சென் சாள்ஸ்

யாழ்ப்பாணம் புனித சென். சாள்ஸ் மகா வித்தியாலய ஒளி விழா இன்று காலை 11.00 மணிக்கு, வித்தியாலய மண்டபத்தில் அதிபர் எம்.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் அமலமரி தியாகிகள் சபை இயக்குநர் அருட்தந்தை போல் நட்சத்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (58)

### யாழ். வலயக் கல்விப் பணிமனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயக் கல்விப் பணி மனையின் வருடாந்த ஒளிவிழா இன்று காலை 9.30 மணிக்கு வலயக்கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் - வலயக்கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா தலைமையில் இடம்பெற்றவுள்ளது.

இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக எம்.எட்வின் ஜோசப் கலந்துகொள்ளவுள்ளார். இந்த விழாவில் கிறிஸ்மஸ் செய்தியை அருட்திரு எம்.டேவிட், அருட்திரு. அருளம்பலம் ஸ்டீபன், பங்குத் தந்தை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

### நெடுந்தீவு

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் ஒளிவிழா நிகழ்வுகள் இன்று மாலை 3.30 மணிக்கு கல்லூரி முதல்வர் அருட்செல்வி இக்னேசியா சூசைப்பிள்ளை தலைமையில் கல்லூரி உள்ளக அரங்கில் இடமபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந் தினராக நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபை வண.போதகர் எஸ்.யோன்செல்வம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

திருப்பலி பூஜை ஒப்புக் கொடுக்கப்பட்டபின்னர் நிகழ்வுகள் இடம்பெற்று, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(113)

☆ ☆ ☆

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 11 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவர் ஞா.அருள்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச வைத்திய அதிகாரி எஸ்.உமாபதிசிவமும், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவு மதகுருமார்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை, இன்றையதினம் காலை 9 மணிக்கு வித்தியாலய வளாகத்திலுள்ள லூர்த்து அன்னை கெவியில் ஒளிவிழா பிரார்த்தனைத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட வுள்ளதுடன், மாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (113)

# சில்லாலை கிராம அபிவிருத்தி சங்க ஆண்டு விழா!

(சில்லாலை)

சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் அ.யோ.இம்மானுவேல் தலைமையில், சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலை மண்டப 'வண.பிதா.டெய்சி' அரங்கில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மனித முன்னேற்ற நடுநிலையப் பணிப்பாளர் அருட்திரு கி.ஜெயக்குமார் கலந்து கொண்டார்.

## யாழ். குடாநாட்டில்

# ஜப்பான் அரசின் உதவியுடன் தகவல் தொழில்நுட்ப மையம்!

யாழ்.மாவட்டத்தில் ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் தகவல் தொழில் நுட்ப மையம் அமைக்கப் படவுள்ளது.

இதற்கென 40 மில்லியன் ரூபா நிதி வழங்கப்படவுள்ளதாகவும், நவீன மயப்படுத்தப்பட்ட கணினித் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்படவுள்ள இந்தக் கணினி மையமானது யாழ். நகரை அண்டியதாக நிறுவப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் கல்விச் சமூகத்தினரிடையே தகவல் தொழில் நுட்பம்சார் அறிவுகளை விருத்தி செய்யும் முகமாகவே இந்தத் தொழில்நுட்பமையம் நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## வடமராட்சி கிழக்கில் கூடும்

# வீதியோர மீன்சந்தையால் போக்குவரத்துக்குத் தடை!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வீதியோரங்களில் கூடும் மீன் சந்தையால் வீதிப் போக்குவரத்து மற்றும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் காலை 6 மணி தொடக்கம் 9 மணி வரை வீதியோரங்களில் மீன் சந்தை கூடுவதால், அதிகளவிலான மக்கள் கூட்டம் நிறைந்திருப்பதால் வீதியில் செல்லும் வாகனங்கள், சைக்கிள்கள், பாடசாலை மாணவர் பெரும் கஷ்டத்தின் மத்தியில் பிரயாணம் செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியோரச் சந்தைகளை அகற்றி, வீதியால் பயணம் செய்யும் பயணிகளின் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடையூறை நீக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அந்தப் பகுதி மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (17)

## பிறந்ததின வாழ்த்துக்கள்

### அகவை ஒன்று



பெயர் : இ.அக்ஷயா (சுவாதி)
முகவரி : கோண்டாவில்

### அகவை எட்டு



பெயர் : சு.நதிஷா
முகவரி : சுழிபுரம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ..........

முகவரி ..........

பிறந்த ஆண்டு ..........

கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..........
பெற்றோர் ஒப்பம்




# சிறந்த நீர்முகாமைத்துவ திட்டமிடல்மூலம் குடாநாட்டின் நீர்ப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்



எஸ்.ஜெயா

இன்று நாம் பாரியதொரு, நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த நெருக் கடிதான் நீர் பற்றிய பிரச்சினையாகும். நீர் ஒரு இலவச பண்டம் என்ற நிலைமாறி, அதுவும் ஓர் பொருளாதாரப் பண்டமாக மாற்றங்கண்டு வரு வதைக் காணமுடிகிறது. இந்த நிலையானது காலப் போக்கில் நாடுகளுக்கிடையே வளப் பங்கீட்டுக்கான யுத்தம் ஒன்று ஏற்பட்டால், அது நீருக்கான யுத்தமாகவே அமையக்கூடும் என எதிர்வு கூறப்படுகிறது. அதாவது மூன்றாவது உலகப் போர் ஒன்று தோன்றினால், அது நீருக் காகத் தோன்றியதாகவே அமையும் எனக் கருதப் படுகிறது.

எமது பிரதேசத்திலும் இத்தகைய பிரச்சி னைகள் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. நீருக் கான பிரச்சினையானது – இருவழிகளில் தோன்று கிறது. ஒன்று வரட்சி. மற்றையது வெள்ளப் பெருக்கு ஆகும். இதில் ஒன்று மட்டும் தொடர்ந் திருந்தாலே பிரச்சினை, இரண்டும் மாறி மாறி இருந்தால் அது சிறந்த திட்டமிடலின்மையாகும்.

அதாவது ஒரு நாட்டில் ஒரு காலப்பகுதியில் மிகையான நீரும், மற்றைய காலப்பகுதியில் கடுமையான வரட்சியும் இருக்குமாயின், அது அந்தப் பிரதேசம் தொடர்பான அந்த நாட்டினது சிறந்த திட்டமிடலின்மையையே எடுத்துக்காட்டு கிறது.

இந்த நிலைமையே எமது பிரதேசத்திலும் காணப்படுகிறது. அதாவது எமது பிரதேசத்தில் மாரிகாலத்தில் மிகையான மழைநீரும், கோடை காலத்தில் சுத்தமான, போதியளவு நன்னீர் கிடைக் காமையும் பாரிய குறைபாடாகும். இதற்குக் காரணம் சிறந்த திட்டமிடலின்மையேயாகும். இதற்காகப் பொருத்தமான முகாமைத்துவ முறை நீர்வளப் பங்கீட்டில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இப்பொழுது எமது பிரதேசத்தில் மழைகாலம் தொடர்வதால், பெருமளவான மழைநீர் வீணே வழிந்து, உவர்ப்பான கடல் நீருடனோ அல்லது ஏரிகளினூடோ சேர்ந்து விடுகின்றன. இதன் காரணமாகத் தரைத் தோற்ற இயல்புகளிலும் பாரிய மாறுபாடுகள் தோன்ற வழிவகுக்கின்றன. அதாவது உவர்நீர் தடுப்பணைகள் இல்லாது, குடியிருப்புக்களுக்குள் உட்புகுவதால், குடிநீர் நிலைகள் உவர்ப்படைவதோடு, தரையின் தன்மையும் இரசாயன மாற்றத்துக்கு உட்படுகின் றன.

மழைநீர் அனைத்தும் கடலைச் சென்றடைவதால், கோடை காலத்தில் வரட்சி ஏற்படக் காரணமாக அமைவதோடு, குடிநீர் பிரச்சினைகளும் தோன்று கின்றன. இத்தோடு விவசாய நிலங்களும் உவர்த் தன்மை பெறுவதால், மண்ணின் (PH) பெறுமானம் மாற்றமடைகிறது. இதற்குப் பிரதான காரணமாக அமைவது போதியளவான நிலக்கீழ் நீர்த் தேக்கமின் மையே ஆகும்.

இதற்குச் சிறந்த நீர் முகாமைத்துவ முறைகளைக் கையாளுதல் வேண்டும். இதன் ஒரு கட்டமாகவே அரசசார்பற்ற நிறுவனங்கள் பல நீர் நிலைகளைப் புனரமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. அவர் களின் இத்தகைய ஆர்வம் – பாராட்டப்படக்கூடிய தொன்றெனினும், அதில் பல குறைபாடுகள் இருப்பது தெரிகிறது.

இவர்களால் புனரமைக்கப்படும் நீர் நிலைகளில் பல, மழைகாலங்களில் முட்டி வழிவதோடு, கோடை காலங்களில் வரண்டுபோய்க் காட்சிதருகின்றன. இத்தகைய தொழில்நுட்பக் குறைபாடுகள் களையப் படவேண்டும்.

அதாவது நீர் நிலைகளில் தேங்கும் நீரை வெளியேறவிடாது, பாதுகாப்பான முறைகளைப் பின்பற்றித் தடுக்க வேண்டும். அத்தோடு அவை மீன் பாசனத்துக்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட வேண்டும்.

இதன்மூலம் நிலக்கீழ் நீரைச் சேமிப்பதோடு, சிறந்த நன்னீர்பெறவும் வழியேற்படுகிறது. இதனால் பயிர்ச்செய்கை விருத்தியும் மேம்படும். இன்று விவசாயம் அபிவிருத்தியால், பயிர் உற்பத்தியில் அதிகளவான இரசாயன உரப் பயன்பாடு நிகழ்வதால், பயிர்களால் உறிஞ்சப்படாத மீதியான இரசாயனப் பதார்த்தங்கள் நீர் நிலைகளில் கலந்து நீரை மாசு படுத்துகின்றன.

இதன் காரணமாக இன்று நாம் பாவிக்கும் குடி நீர்க் கிணறுகளில் ஐதரசன் ($H_2$), நைதரசன் (N) என்பன அளவுக்கு அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதற்கு மாற்றீடாக நாம் மழைநீரைக் கிணறுகளில் தேக்குவதனூடாகச் சீர் செய்துகொள்ளலாம் எனக் கருதப்படுகிறது. இதற்காக நாம் எல்லோரும் சிறந்த நீர் முகாமைத்துவத்தைப் பின்பற்றவேண்டும்.

நாம் எமது வீட்டுக் கூரைகளிலிருந்துவரும் நீரைத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி, ஏந்தி அதை நேரடியாகக் கிணற்றினுள் செலுத்தலாம்.

உங்கள் வீட்டிலிருந்து வீணே தரையில் பாயும் நீரை வெளியேறவிடாது, பாரிய குழிகளைவெட்டித் தேக்கிவையுங்கள். நீர் வற்றிப் பின்பு அதனுள் கழிவுகளை இட்டு மூடிவிடலாம். இவ்வாறு நீரை வீட்டில் தேக்குவதால் நுளம்புத் தொல்லைக்கு ஆட்படலாம். இதைத் தவிர்ப்பதற்குச் சுகாதாரத் திணைக்களத்தின், மலேரியாக் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் தொடர்புகொண்டு, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட, நுளம்புக் குடம்பிகளை உண்ணும் பக்றீரியாக்களை வேண்டிவிடலாம். அல்லது குடம்பிகளை உண்ணும் மீன்வகைகளைப் பயன்படுத்தலாம்.

மீன் வகைகளைப் பயன்படுத்துவதால் சிறிய தொரு பொருளாதார வருவாயும் கிடைக்கிறது. அல்லதுபோனால், இரசாயன முறைகளையும் பயன் படுத்தலாம். ஆனால், இவை சூழல் மாசுபடுதலைத் தூண்டுவதால், உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளே சிறந்ததாகும்.

யாழ்.குடாநாட்டிடைப் பொறுத்தவரை தரைக்கீழ் நீரானது, எமக்குக் கிடைத்த பாரிய கொடையாகும். இதை நாம் சீரான முறையில் பயன்படுத்திப் பேணுதல்வேண்டும். கட்டுப்பாடு இல்லாதுபோனால் பாலைவனமாகும் என்ற எதிர்வுகூறல் உண்மையாகி விடலாம். இதைத் தவிர்க்கவே நாம் ஒன்றுபடவேண்டும்.

எமது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நாம் இந்த மழை காலத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மழையால் கிடைக்கின்ற நன்னீரைக் கொள்கலன்களில் சேமித்தோ அல்லது தரைக்கீழ் தொட்டிகளில் சேமித்தோ வரட்சியான காலங்களில் பயன்படுத்தலாம். மழைநீரானது – ஆண்டுக்கணக்கில் கெட்டுப்போகாது இருக்கும் தன்மை கொண்டது. இதை வடிகட்டியோ அல்லது பதப்படுத்தியோ குடிநீராகப் பயன்படுத்தலாம். இந்தமுறை பல நாடுகளில் பின்பற்றப்படுகிறது. நாமும் பொருத்தமான பிரதேசங் களைத் தேர்வுசெய்து, பின்பற்றுதல் சிறந்ததாகும்.

இதை வர்த்தக ரீதியாகவும் பயன்படுத்தலாம். மழைநீரைச் சேமித்து சிறந்தமுறையில் சுத்தப்படுத்தி, கொள்கலன்களில் அடைத்து, விற்பனைக்குவிடலாம். இது மிகக்குறைந்த முதலீட்டுடன் அதிகூடிய வருவாய் பெறக்கூடிய தொழிலாகும். தொழில் முனைவோர் முன்னேற சிறந்த தொழில் சந்தையை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய வளமாகும்.

எனவே, வானத்திலிருந்து நிலத்தில் சொரிகின்ற ஒவ்வொரு மழைநீர்த் துளிகளையும் முத்துக்களாகக் கருதி, அதைச் சேமித்துச் சிறந்த நீர் முகாமைத்து வத்தின் கீழ் கையாள்வோமாயின், எமது வாழ்க்கை பொற்காலமாக அமையும் என்பது திண்ணம்.

**"வானிலிருந்து விழும் ஒவ்வொரு மழைத்து ளிகளும் – துளிகள் அல்ல அவை மணிமுத்துக்கள்"**

# வீணாகும் விவசாய உற்பத்திகளை உரிய நடவடிக்கைகள் மூலம் தடுக்கலாம்

(சென்றவாரத்தொடர்ச்சி...)

சில விவசாயிகள் - விளைச்சலை முற்றுவதற்கு முன்னர் பிஞ்சாக இருக்கும் போதே அறுவடைசெய்து கொள்கின்றனர். இதனால் இவற்றின் நிறை குறைந்து விடும். இது விவ சாயிகளுக்கு ஏற்படும் நட்டமாகும் நிறை குறைவடைவதுடன், விரைவாக பக்றீரியாவின் பாதிப்பும் ஏற்படும்.

அதே போல் தாமதமான விளைச் சலும் மரக்கறி, பழவகைகளை முற்ற வைத்து விடும். இவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பும் கிடைக்காது. பல காலம் களஞ்சியப்படுத்தும் தன்மை யும் குறைவடையும்.

இதனால் வெவ்வேறு பயிர்களின் விளைச்சலைப் பெறும் காலத்தை அறிந்திருக்க வேண்டும். விளைச் சலைப் பெறும் நாளில் எந்த நேரங் களில் விளைச்சலைப் பெறவேண்டும் என்பதையும் விவசாயிகள் அறிந் திருக்க வேண்டும். முக்கியமாக மரக் கறி, பழவகைகளின் விளைச்சலைப் பெறும்போது, சூரியஒளி குறைந்த நேரங்களிலேயே விளைச்சலைப் பெறவேண்டும். சூரிய ஒளிஅதிகளவு படுவதால் இவை பழுதடையும் வாய்பபு அதிகம்.

பெற்றுக்கொண்ட விளைச்சலை வகைப்படுத்துவது மிக முக்கியம். சந்தைக்கு அனுப்புவதற்கு முதல் வகைப்படுத்த வேண்டும். இதனால் விவசாய உற்பத்திகளுக்குரிய விலை யைப் பெற்றுக் கொள்ளலாம். வியா பார நிலையங்களில் ஏற்படும் கழிவு களையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

மரக்கறி, பழவகைகளை உரிய முறையில் பொதி செய்ய வேண்டும். ஒரு பையில் நிறைய விளைச்சலை அடக்கிப்பொதி செய்வதைத் தவிாக்க வேண்டும். இதன் மூலம் நசிபடுதல், கீறுதல் போன்றவற்றால் உரிய களஞ் சியப்படுத்தும் பைகளைப் பாவிக்க வேண்டும்.

விவசாய நிலங்களிலிருக்கும் உற் பத்திகளைச் சேகரிக்கும் வியாபாரிகள், உரிய முறையில் பாதுகாப்பாக களஞ் சியப்படுத்துவதில்லை. சூரிய ஒளி படு மாறோ, காற்றோட்டமாக இருக்குமாறோ களஞ்சியப்படுத்துவதில்லை. இதனால்



சசி சந்திரகாசன்

பொதிகள் அதிக சூடாதல், நசிவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத் துக்கு பொருட்களைக் கொண்டு செல் லும் போதும், அழிவுகள் ஏற்படலாம். இந்தப் பொதிகள் தேவைக்கு மேலதிக மான உயரத்தில் ஏற்றப்படுவது, அவற் றின் மீது மனிதர்கள் ஏறிப்படுப்பது போன்ற காரணங்களால் நசிவுகள் ஏற்படும்.

***விவசாய உற்பத்திகளைச் கேகரிப்பவர்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்***

1. சிறந்த களஞ்சியப்படுத்தும் முறை களைப் பாவித்தல், உரிய களஞ்சியப் படுத்தும் பொருட்களை உபயோகித்து விவசாயிகளை ஊக்குவித்தல்.
2. வாகனங்களில் பொதிகளை ஏற்றும் போது அவதானம் தேவை.
3. அளவுக்கதிகமான சூரியஒளிபடாத வாறு வைத்திருக்க வேண்டும்.
4. வகைப்படுத்தப்பட்ட தரமான மரக்கறி, பழவகைகளுக்கு அதிகவிலை வழங்கல்.
5. காற்றோட்டமுள்ளவாறு வாகனங் களில் அடுக்கி, பிரயாணங்களில் ஈடுபடுத்தல்.
6. வாகனங்களில் ஏற்றும் போதும், இறக்கும் போதும் அவதானமாக இருக்க வேண்டும்.

***மொத்த வியாபாரிகளால் மேற்கொள் ளக்கூடிய நடவடிக்கைகள்.***

1. பாதுகாப்பான முறையில் பொருட் களை ஏற்றுவதும், இறக்குவதும்.
2. அதிக சூரியஒளி படாதவாறு வைத்திருத்தல்.
3. வகைப்படுத்தப்பட்ட மரக்கறி, பழ வகைகளுக்கு உயர்விலை கொடுத்தல்.
4. வியாபார நிலையத்தை அளவாக அமைத்தல்.
5. தகுந்தவாறு களஞ்சியப்படுத்தல்.

***சில்லறை வியாபாரிகளால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்***

1. சூரியஒளி, மழை படாதவாறு வைத்திருத்தல்.
2. பாதுகாப்பான முறையில் ஏற்றி, இறக்கல்.
3. தகுந்த முறையில் காட்சிப்படுத்தல்.
4. உரிய முறையில் களஞ்சியப் படுத்தி இருக்கும் பொதிகளை மட்டுமே மொத்த வியாபாரிகளிடமிருந்து கொள் வனவு செய்தல்.

இவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் முயற்சித்து, மரக்கறி, பழவகைகள் வீணாவதைத் தடுத்துக் கொள்ளலாம். இதன் மூலம் பெருமளவு பணத்தைச் சேமிக்கவும் முடியும்.

## தொழில்மலர்

# ஒரு தொழிலில் தொடர்ந்து ஈடுபடும் தொழிலாளர்கள் அருகி வருகின்றனர்

உயிர் உருக்கான கைதேர்ந்த ஒற்றுருக் கலைஞரான ஸ்ரீ ஆனந்தராஜன் என்பவரை கொக்குவில் சிவப்பிரகாசம் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் சந்தித்து, தொழிலும் அதனூடான கலையுமான நுணுக்கம் கொண்ட படைப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றமை பற்றிக் கேட்டறியச் சென்றோம். அங்கு அவருடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை வாசகர்களுக் குத் தருகின்றோம்.

1981 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டு வரை அதாவது யாழ்ப்பாண இடப்பெயர்வுவரை ஒற்றுரு (Block - Making) தயாரிக்கும் தொழிலை செய்துவந்தேன். அந்தக் காலப்பகுதியில் யாழ். குடாநாடு யுத்தத்தில் மூழ்கியிருந்த காலப்பகுதி ஆகும்.

ஆகவே, பொருளாதாரத்தடை அந்தக் காலத்தில் இருந்தநிலையில் எந்தவித தொழில் நுட்ப இயந்திர, வசதிகளும் கிடைக்காத வேளை, இந்தத் தொழிலுக்கு வரவேற்பும் முக்கியத்துவமும் கிடைத்தது. அதனால் நிறைய வாடிக்கையாளர்கள் என்னிடம் வேலைக்கு வருவார்கள். அந்த வேலைகளில் நிறைய ஒற்றுருக்கு வேலைகளைச் செய்து வந்ததால், தொழிலில் சிறப்புத் தேர்ச்சி பெறமுடிந்தது. இதனால் விரைவாக வாடிக்கையாளர்களின் வேலைகளைச் செய்து முடிக்க முடிந்தது.

வரையப்பட்ட படங்களைக் கார்பன் பேப்பர் வைத்து அழுத்தப்பட்டு மரக் கட்டைகளில் பதிந்த படங்களைச் செதுக்கி, ஒற்றுரு செய்தேன். நுணுக்கமான படங்களைச் செதுக்குவதென்றால் கூலி கொஞ்சம் அதிகம். நுணுக்கமான ஒரு பெரிய படத்தைச் செதுக்கி எடுக்கச் சுமார் எட்டு மணித்தியாலம் தேவை. சாதாரண படங்கள் என்றால் ஐந்து ஆறு மணித்தியாலங்களில் முடித்து விடலாம்.



புதிய வடிவங்களைப் பதிக்க வேண்டும் என்றாலும் பதிக்கலாம். இந்தத் தொழிலைச் சுய தொழிலாகவே செய்து வந்தேன்.

இந்தத் துறையில் எனக்கு தொழிநுட்ப ஞானம் நிறையவுள்ளது. தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்ளும்போது இது ஏற்பட்டது எனலாம். அந்தக் காலப்பகுதியில் ஓவியர் ரமணியுடைய ஓவியங்கள் கேலிச் சித்திரங்கள் கூடவே மல்லிகை, வெளிச்சம், ஆதாரம், பாடசாலைச் சஞ்சிகைகள் மற்றும் நூல்களுக்குப் படங்கள், அட்டைப்படங்கள் போன்றனவற்றுக்கும் மேலும் பல வற்றுக்கான ஒற்றுருக்களை நான் செய்து கொடுத்தேன்.

இந்தத் தொழிலில் அழகாகப் படங்களை வரையத் தெரிய வேண்டும். படங்களை மரத்தில் வரைந்து செதுக்கி வைத்திருக்கிறேன். முற்றிலும் இலாபகரமாக இயங்கும் தொழில் எனவும் கூறமுடியாது. படம் ஒன்றை மரப் பலகையில் செதுக்குவதற்கு அதிக நேரமாகும். படங்களைக் கலை அம்சத்துடன் செதுக்குவதுதான் மிகவும் சிரமமான வேலை. ஒரு நாளைக்கு ஒரு படத்தைத் தான் செய்ய முடியும்.



ஒற்றுரு வேலை - ஏதோ எனக்கு தற்செயலானதல்ல. எங்களின் குடும்பம் கைவினைஞர் குடும்பம். எனது தகப்பனார் நடராஜா ஒரு நகைத்தொழிலாளி. அவருடைய கலைப்பார்வை விசாலமானது. சிறு வயதிலிருந்தே எனது தந்தை தங்கநகைகள் செதுக்குவதைப் பார்த்து வியந்திருக்கிறேன். அத்துடன் எங்களின் வீட்டுக்குப் பக்கத்தில் தான் சிற்பாசாரியார் செல்லையாவின் வீடும். ஒரே வளவில் நாங்கள் இருந்ததால் அவரின் வீட்டைக் கடந்து தான் போக வேண்டும். சிற்பாசாரியார் உருவங்களை நுணுக்கமாகச் செதுக்குவார். அழகும், எளிமையும் அவரது சிற்பங்களில் நன்கு தெரியும்.

1977 ஆம் ஆண்டில் சிவாஜி கணேசன் நடித்த ஞான ஒளி படத்துக்கு அவர் போஸ்டர் வெட்டும் போது, அவருடன் நானும் சேர்ந்து கொண்டேன். இதன்பின்னர் 1981 ஆம் ஆண்டு வரை அவரிடம் வேலை பழகினேன் அதன் பிறகு சுயமாகத் தொழில் செய்கிறேன்.

கைதேர்ந்த மரக் கைவினைஞர் சான்றிதழைப் பாராட்டு விழாவில் றோட்டறிக்கழகம் எனக்கு வழங்கியது.

ஆனால், இன்றைய காலப் பகுதியில் கணினியை பின் பற்றிப் படங்களை அச்சிடுவதால், ஒற்றுரு தயாரிக்கும் வேலைகள் குறைந்து போய்விட்டது. சமகாலத்துக்கு ஏற்ற மாதிரி தொழிலை மாற்றிக் கொள்வது இலாபமாக அமையும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ரெஜி போமில் படங்களை, எழுத்துக்களை செதுக்கி, திருமண வைபவங்கள், பிறந்த நாள் கொண்டாட்டங்கள் போன்ற வைபவங்களுக்குக் கொடுத்தல், அட்டையில் படங்களை வெட்டிக் கொண்டாட்டங்களில் சுவரில் ஒட்டி, வீட்டை அழகுபடுத்திக் கொள்ளுதல். கதவுகள், யன்னல்களில் பல உருவங்களை அதாவது வாடிக்கையாளர் களின் தேவைக்கேற்ப செதுக்கி கொடுத்தல்



ஸ்ரீ ஆனந்தராஜன்

இப்படியான வேலைகள் தற்போது நிறைய வருகின்றன.

ஆரம்ப காலங்களில் ஒரு தொழிலை பொறுமையுடன் தொழிலாளர்கள் செய்து வருவார்கள். ஆனால் இன்றைய காலப்பகுதியில் அவசரமான சூழல் காணப்படுகிறது. ஒரு தொழிலையே தொடர்ந்து மேற்கொள்ளும் தொழிலாளர்கள் குறைவாகவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சின்னச் சின்ன சதுரப் பலகைத் துண்டுகளில் பல படிவங்களில் கருத்துப்படச் செதுக்கிய படங்கள் பூரணமாகாத நிலையில் அங்கொன்றும், இங்கொன்றுமாக அவரது அறையை



நிரப்பி இருந்ததைப் பார்க்கும்போது அவற்றை விலைக்கு வாங்கவேண்டும் போல் இருந்தது. கலையின் அழகு, அறிவும் மக்களிடம் கண்டிப்பாக இது



போய்ச் சேரும் என்ற நம்பிக்கையில் கலையின் பெறுமதி தெரிந்த ஸ்ரீ ஆனந்தனிடம் விடைபெற்று வந்தேன்.

**நேர்காணல் - செல்வா**

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 100/= | 70/= | 80/= | 100/= | 100/= | 80/= | 100/= |
| வெண்டிக்காய் | 60/= | 60/= | 70/= | 50/= | 55/= | 50/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 80/= | 80/= | 85/= | 80/= | 100/= |
| கத்தரிக்காய் | 60/= | 45/= | 50/= | 60/= | 55/= | 80/= | 75/= |
| பாகற்காய் | 100/= | 90/= | 100/= | 110/= | 95/= | 100/= | 100/= |
| கரட் | 60/= | 80/= | 100/= | 70/= | 70/= | 80/= | 70/= |
| பீற்றூட் | 40/= | 70/= | 80/= | - | 50/= | 60/= | 80/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | - | - |
| வெங்காயம் | 55/= | 45/= | 50/= | 50/= | 60/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 80/= | 60/= | 70/= | 100/= | 90/= | 60/= | 100/= |

# நிரந்தர சமாதானத்தைப் பெறுவதற்கு இழப்புக்களைச் சந்திக்கவே வேண்டும்!

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

(வவுனியா)

கடந்த கால யுத்தத்தினால் நாம் பல வகையில் பாதிப்புக்குள்ளானோம். பல இழப்புக்களைச் சந்தித்துள்ளோம். இந்த இழப்புக்களை ஈடுசெய்வதானால் - நாம் இன்று ஒருவரையொருவர் மன்னித்து கரம் கொடுத்து உதவுவதால் மட்டுமே - விரக்தி மனநிலையையும் வெறுப்பு மனநிலையையும் இல்லாதொழிக்கமுடியும். இதன் மூலமே நாம் நிரந்தர சமாதானத்தைப் பெறமுடியும் என, மன்னார் மறை மாவட்ட வாழ்வோதய நிறுவனத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட 'மாமக்கள் தினம்' நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 20 வருடகால யுத்தத்தின் போது உயிர்களைப் பறிகொடுத்த குடும்பங்களைக் கௌரவிக்கும் முகமாகவும், இறந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களது ஆத்ம சாந்திக்காகச் செபிக்கவும், இறந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் சகிதம் இந்த நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

மன்னார் நகர மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - வன்னிப் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கருத்துத் தெரிவிக்கையில் -

இழப்புக்களை சந்தித்து விரக்தியில் வாழும் குடும்பங்களுக்கு இந்த விதமான கௌரவிப்பு ஓரளவுக்கு ஆறுதல் கொடுத்திருக்கின்றது. இப்படியான நிகழ்வுகளை மன்னார் வாழ்வோதய நிறுவனம் வருடா வருடம் நினைவு கூருவது ஒரு சிறப்பான அம்சமாகும்.

அடுத்து உரையாற்றிய வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் -

போருக்குப் பலியான இந்த பொதுமக்களை நினைவுகூரும் நிகழ்வு, வட - கிழக்குப் பகுதியில் மன்னாரில் மட்டுமே முன்னெடுக்கப்படுகிறது. இந்த மாமக்கள் - கடந்த யுத்த சூழலில் மிகவும் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டும் மற்றும் குண்டு தாக்குதலுக்கு இலக்காகியும் தம் உயிரையும் துறந்தார்கள். வருடா வருடம் இந்த மாமக்களை நினைவுகூருவதை ஒரு முக்கியமான விடயமாக கருதுகின்றேன் எனத் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த காலப் போரினால் அப்பாவிப் பொதுமக்கள் தமது உயிர்களை துறந்திருக்கிறார்கள். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் இவர்களை நினைவுகூருவது அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலாக அமைகின்றது. மன்னார் மாவட்டத்தில் இந்த யுத்தத்தினால் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளம் சமுதாயத்தினருக்கு, அடுத்த ஆண்டு பலவித தொழில் பயிற்சிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.சூசைதாசன் சோசை, மற்றும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் விநோதனோகராதலிங்கம் போன்றோரும் உரை நிகழ்த்தினர்.

சர்வமத வழிபாட்டுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மூன்று மதத் தலைவர்களும் இணைந்து மாமக்களின் நினைவுச் சுடரை ஏற்றினார்கள்.

இந்த நிகழ்வில், மன்னார் திருமறைக் கலாமன்றத்தினரால் 'அவலங்கள்' என்னும் உணர்வை ஏற்படுத்தக்கூடிய சிறப்பு நாடகம் இடம்பெற்றது.

வாழ்வோதய நிறுவனத்தின் இயக்குநர் அருட்திரு பி.யேசுராஜா அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 700 குடும்பங்களை சேர்ந்த உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



வன்னிப் பதிவுகள்



உலக உணவுத் திட்டம், நிகொட் திட்டம் ஆகியவற்றின் நிதியுதவி மூலம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால், வவுனியா பூம்புகார் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களுக்காக உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்பட்ட உலர் உணவுகள் கிராம மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இதனை கிராம மக்கள் பெற்றுக் கொள்கின்றனர். (படம்: கனகரவி)

# படு மோசமான நிலையில் வவுனியா குட்செட் வீதி!

வவுனியா குட்செட் வீதி படு மோசமான நிலையில் சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதனால் பல நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன.

மிக நீண்டகாலமாக சேதமுற்றுக் காணப்படும் இந்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இந்தப் பகுதி மக்களால் முறைப்பாடு செய்யப்பட்ட போதும் எந்த விதமான நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்காததையிட்டு இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் மிக நெருக்கமாக நூற்றுக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற போதிலும் இவர்கள் இந்த வீதியூடாக போக்குவரத்து செய்ய முடியாமையால் பாடசாலை மாணவர்கள் முதல் பயணிகள் வரை பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

## எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு

# நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியோர் பெயர் விபரம்!

உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினரால் நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் நாளை மாலை 4 மணிக்கு கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் - உருத்திரபுரம் கிளிநொச்சியை சேர்ந்த மீனலோஜினி இதயசிவதாஸ் முதலாம் இடத்தையும், மீசாலை வடக்கைச் சேர்ந்த சுபாமதி கணபதிப்பிள்ளை இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டர்லின் நிருஜா சத்தியநேசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு பணப்பரிசாக முறையே 5 000 ரூபா, 3000 ரூபா, 2 000 ரூபாவும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. மேலும் தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. அவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு-

மாலாதேவி மதிவதனன் (அளவெட்டி), ராதிகா பொன்னம்பலம் (மீசாலை கிழக்கு), மாரிமுத்து பரமேஸ்வரன் (கனகாம்பிகைக்குளம் கிளிநொச்சி), திருநீலகண்டன் கோவிந்தராஜன் (வட்டக்கச்சி காவல் பணிமனை), சு.சுபோஜினி (இராமநாதபுரம் கிளிநொச்சி), ரஜீபா இரத்தினம் (கணேசபுரம் கிளிநொச்சி), இருதயதாசன் பேட்மன் நோயல் (அக்கராயன்), கு.சுகந்தினி (ஆசிரியர் வீதி சாவகச்சேரி), செல்வமலர் பஞ்சலிங்கம் (உடையார்கட்டு), நாகரூபினி சிவரஞ்சன் (வன்னேரிக்குளம் கிளிநொச்சி) ஆகியோருக்கே சான்றிதழ்கள் வழங்கப்படவிருக்கின்றன.

# விபத்தில் மாணவி காயம்!

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் செட்டிகுளம் முகத்தான்குளம் பகுதியில் பாடசாலை சேவை பஸ்ஸிலிருந்து இறங்கிச் சென்ற மாணவிமீது, எதிரேவந்த எரிபொருள் கொள்கலன் மோதியதில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரான முகத்தான்குளத்தைச் சேர்ந்த யோகராசா சர்மிளா (வயது 14) என்ற மாணவியே காயமடைந்தவர் ஆவார். இவர் வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளைப் பட்டி தினம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளைப்பட்டிதினம் கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வு - இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் என்பன ஒக்ஸ்பாம் நிறுவனத்துடன் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைக்கும் முகமாக வெண்பட்டிதினத்தை கொண்டாடவுள்ளன.

# தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு!

புதுக்குடியிருப்பு மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை மாதாந்த ஒன்றுகூடல் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த ஒன்றுகூடலில் தற்பொழுது அரசின் நிலைப்பாடுகள் தொடர்பாகவும், சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகள் தொடர்பாகவும், மக்கள் மத்தியில் விரிவான கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் கிராம ரீதியாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்துவதற்குத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கோட்ட, மாவட்ட, தேசிய எழுச்சிப் பேரவை அங்கத்தவரும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளருமான கரிகாலன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வவுனியா செட்டிகுளம் பகுதியில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு!

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெறுகின்றன.

இராணுவத்தினரதும், காவற்துறையினரதும் கட்டுப்பாட்டில் உள்ள செட்டிக்குளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, திருட்டுச் சம்பவங்கள் போன்றன அதிகரித்துக் காணப்படுகின்றன. இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்யும் காவற்துறையினர் குற்றப் பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர்களை விடுதலை செய்வதால், மீண்டும் இவர்கள் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் சிறப்பு நிகழ்வுகள்!

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் முதலாவது மனித உரிமைகள் தினம் நாளை வெள்ளிக்கிழமை கிளிநொச்சி ஏ 9 பிரதான வீதியருகில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் தனிநபர் குழுக்கள் நிறுவணங்கள் ஆகியவற்றுக்குள்ள உரிமையையும் பொறுப்பையும் ஏற்று, வடக்கு - கிழக்கிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றால் உருவாக்கப்பட்டதே வடக்கு - கிழக்கு உரிமைகள் அமைப்பு. வடக்கு - கிழக்கிலுள்ள அனைவரதும் மனித உரிமைகள் பாதுகாப்பு, மேம்பாடு ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு இந்த அமைப்பு கடந்த ஜூலை 9 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.

இந்த அமைப்பு வண. பிதா கருணாரட்ணம் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சிவபாலன், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அருளானந்தம், புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், டென்மார்க்கைச் சேர்ந்த டாக்டர் சிறீஸ்கந்தராஜா, நியூசிலாந்தைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர் டாக்டர் மாலதி ஆகியோர் இந்த அமைப்பின் செயற்குழு அங்கத்தவர்களாக உள்ளனர்.

அண்மையில் இந்த அமைப்பின் யாப்பு விதிமுறைகளைத் தயாரிப்பதற்கு ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான குழுவினர், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள தமிழ் சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். தற்போது இந்த அமைப்பின் யாப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் மனித உரிமைகள் தினம் அனுஷ்டிப்பு

வவுனியா மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, நாளை வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கல்லூரி அதிபர் ஜெயநாயகி தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட நீதிவான் இளஞ்செழியன் மனித உரிமைகள் தொடர்பாக கருத்துக்களை நிகழ்த்தவுள்ளார்.

இந்த நிகழ்வில் வவுனியா றம்பைக்குளம் மகளிர் கல்லூரியின் ஆண்டு 9 முதல் உயர்தர மாணவர்கள் பங்குகொள்ளவுள்ளனர். (03)

## வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை

கோணாவில் காந்தி கிராமம், ஊற்றுப்புலம், பூநகரி, ஆலங்கேணி, நல்லூர் கிராமங்களில் வரட்சி நிவாரண வேலைகள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரையில் நிவாரணம் வழங்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் மழை காரணமாக நாளாந்தம் கூலி வேலை செய்து வாழ்க்கையை நடாத்திச் செல்லும் இந்தக் கிராமத்து மக்கள், தற்போது வேலைகளுக்குச் செல்ல முடியாத நிலையில் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை*
*இகழ்வார் பொறுத்தல் தலை*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழர் தம் இராணுவ வலுவை மேம்படுத்த வேண்டியது அவசியமே!

சமாதான சூழலைப் பயன்படுத்தி சிறிலங்கா அரசானது தனது இராணுவ வலிமையை பலமடங்கு அதிகரித்துள்ளதுடன், பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் விடயத்தில் பொருத்த மற்றதும், நியாயமற்றதுமான காரணங்களை மாற்றி மாற்றிக் கூறிக்கொண்டு தமிழர் தரப்பையும், சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிக் காலங்கடத்தும் தந்திரோபாயத்தை தொடர்ந்தும் மேற்கொண்டுவருவது தொடர்பான உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

ஜனாதியால் நியாயமற்றதும், சட்டரீதியிலானதுமான ஒரு அரசியல் சதியொன்றின்மூலம் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு கலைக்கப்பட்டதன் பின்னர் இன்று வரையான காலப்பகுதிக்குள் ஆயுத மற்றும் படைபலத்தைப் பெருக்கும் நடவடிக்கைகள் தீவிர முனைப்புடன் புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாலும், அதன் தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவாலும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தற்போது கிடைக்கும் செய்திகள் உறுதிசெய்துவருகின்றன.

அமெரிக்காவின் சிரேஷ்ட இராணுவ ஆய்வாளரான பிரைய்ன் புளொட் கெட் என்பவர் இலங்கை இராணுவம் தொடர்பாக 'SRI LANKA'S MILITARY - THE SEARCH FOR A MISSION' என்ற பெயரில் நூல் ஒன்றினை அண்மையில் வெளியிட்டுள்ளார். அந்த நூலில் அவர் குறிப்பிட்டுள்ள இலங்கை இராணுவம் தொடர்பான விடயங்கள் சிறிலங்கா அரசின் கொடியதும் மாற்றவே முடியாததும், மாறவேமாட்டாததுமான போர்வெறிகொண்ட முகத்தை அப்பட்டமாக வெளிப்படுத்துவனவாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த அமரிக்க இராணுவ ஆய்வாளர் ஒரு இராணுவ புலனாய்வு அதிகாரியும், இராணுவத்துடன் இணைந்து பணியாற்றும் ஒரு பேராசிரியருமாவார். எனவே, இவரது இலங்கை இராணுவம் குறித்த நூல் நிச்சயமாக உண்மையானதும், அதிகார பூர்வமான தகவல்களையும் உள்ளடக்கக்கூடியதுமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைமூலம்தான் தீர்வு காணமுடியும் என்று அறிக்கைகளைவிட்டுவரும் ஜனாதிபதிக்கு தனது வார்த்தைகளின் விசுவாசத் தன்மையில் அவருக்கே நம்பிக்கை இருக்குமாயின் போர்நிறுத்தம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் காலத்தில் இராணுவத்தை ஆளணி ரீதியிலும், ஆயுத ரீதியிலும் நவீனத்துவப்படுத்தி பலப்படுத்தும் குள்ள நோக்கத்துடன், சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான யுத்ததுக்கான தயாரிப்பு வேலைகளில் முனைப்புடன் செயற்பட அவசியமே கிடையாது.

ஆரம்பம் முதலே சமாதான நகர்வுகளை வெளிப்படையாகவே எதிர்த்துவரும் ஜனாதிபதியின் இன்றைய செயற்பாடுகள் சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் தேசிய மற்றும் சர்வதேச சக்திகள் அனைத்தையும் ஏமாற்றமடைய வைத்துள்ளன.

போரினால் சிதைந்துபோன நாட்டையும், மக்களையும் புத்துயிர்ப்புக்கொள்ளவைக்க புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளில் - சமாதான சூழலில் சர்வதேச உதவிகளைப்பெற்று ஈடுபட வேண்டிய அரசு அத்தகைய உணர்வு ஏதுமின்றி சர்வதேச உதவிகளை போருக்கான தயாரிப்புப் பணிகளுக்கும் ஆயுதக் கொள்வனவுக்கும் பயன்படுத்திச் சமாதான முயற்சிகளில் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்கும் சக்திகளையும் கேலிசெய்வதாகவே அமையும்.

சமாதான விரோத - இனவாத சிங்களக் கட்சிகளால் முண்டு கொடுக்கப்படும் அரசாங்கம் அவர்களின் அற்பசொற்ப ஆதரவுப் பலத்திலேயே ஆட்சியை நடத்திக்கொண்டு அவர்களின் விருப்புக்களுக்கு எதிராக பேச்சுவார்த்தை முயற்சிகளில் விசுவாசமாக ஈடுபடமுன்வருமா என்ற கேள்விக்கு விடையே இல்லை என்பதே ஆகும்.

இதனை அந்த அமெரிக்க ஆய்வாளரின் நூல் உறுதி செய்வதாகவே உள்ளது.

விமானப்படையின் பலம் இருமடங்காகியுள்ளதுடன், புதிதாக 20 இற்கும் மேற்பட்ட விமானங்கள் படையில் இணைக்கப்பட்டுள்ளதுடன், தாக்குதல் கனரக கவச வாகனங்கள் - அதாவது டாங்கிகளின் தொகை மும்மடங்காகியுள்ளது. ஆட்லறிப் பீரங்கிகளின் தொகை இருமடங்காகியுள்ளது.

இவ்வாறு மேலும் பல அதிர்ச்சிதரும் புள்ளிவிபரங்களை தனது நூலில் அந்த ஆய்வாளர் தெரிவித்துள்ளார் என அறிய வந்துள்ளது. இவையெல்லாம் சமாதானத்தைப் பாதுகாக்கத்தான் என்று ஜனாதிபதி கூறினாலும் ஆச்சரியப்படமுடியாது.

சமாதானத்திற்காக யுத்தம் செய்கிறேன் என்று புதிய தத்துவப் பிரகடனம் செய்த சீமாட்டியல்லவா?

அடிக்கடி சமாதானத்தை வலியுறுத்தும் அமெரிக்காவின் இராணுவ ஆய்வாளர் ஒருவரே இந்த நூலை எழுதியுள்ளார் என்பதைப் பார்க்கும்போது - அமெரிக்க அரசு இலங்கை விவகாரம் தொடர்பாக எத்தகைய முடிவை எடுப்பதற்கு இந்த நூல் ஒரு நம்பகரமான வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பேச்சுவார்த்தையின் ஆரம்பகால இராணுவச் சமநிலை இப்போது இல்லை... அரசு அதனை மீறிவிட்டது. இந்த நிலையில் தமிழர் தரப்பும் தமது இராணுவ வலுவை மேம்படுத்தவேண்டிய அவசியத்தின் நியாயத்தன்மையை சர்வதேச சமாதான விரும்பிகள் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

## நாடும் நடப்பும்




# அரசியற்துறை அலுவலக தாக்குதல் பாரிய யுத்தநிறுத்த மீறலாகும்!

### மட்டு - அரசியற்துறை கண்டனம்

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் நகர அரசியல் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல் போர் நிறுத்த மீறல் என விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற்துறை வன்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மட்டு - அம்பாறை அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் நகர அரசியல் பணிமனை நேற்று முன்தினம் அதிகாலை 1.20 மணியளவில் தீய சக்திகளின் குண்டுத் தாக்குதலில் இலக்காகியுள்ளது. தொடர்ச்சியான நான்கு குண்டுகள் வீசப்பட்டுள்ளன. இதன் போது அலுவலகம் முற்றாகச் சேதமடைநதுள்ளது.

குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படும் பொழுது மட்டு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்புமாறன் மற்றும் நகரத்தில் அரசியல் பணிபுரியும் போராளிகள் அனைவரும் அங்கு இருந்துள்ளனர். இதன்போது அவர்களுக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை.

மற்றும் இந்தக் குண்டுத் தாக்குதலால் பணிமனையின் கதவுகள், யன்னல்கள், யன்னல் கண்ணாடிகள் என்பன முற்றாக சேதமடைந்துள்ளன. இதற்கு முன்னரும் 20.11.2004 அன்றும் தீய சக்திகளால் இந்த அலுவலகம் குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த அலுவலகமானது - பொலிஸ் நிலையத்திலிருந்து 50 மீற்றர் தூரத்திலும், இராணுவ படைத்தரப்பின் முற்று முழுதான இராணுவக் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ளது என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இவ்வகையான தீய சக்திகளின் செயற்பாடுகள் எதிர் காலத்தில் நடைபெறாவண்ணம் தடுத்து நிறுத்துவதற் காக படைத் தரப்பினரின் ஒத்துழைப்பானது இங்கு அவசிய மான தாகும்.இவ்வகையான சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றமையால் இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தச் சம்பவத்தை நாங்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவித்துள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கரவெட்டிப் பகுதிக்கான

## குழாய் வழி மூலமான நீர் விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை

வடமராட்சி கரவெட்டி பிரதேசத்தில் உள்ள மக்களுக்காக குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிப்பு செய்யுமாறு அந்தப்பகுதிமக்கள் யாழ்.அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டி பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக இருந்துவருகிறது. குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குழாய் மூலமாக குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அவை காலையிலும்,மாலையிலும் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் அந்தப்பகுதி மக்கள் குடிநீரைப் பெறுவதிலும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, இதனை கவனத்திற்கொண்டு அனைத்து மக்களும தமக்குத் தேவையான அளவு குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தக் குழாய் மூலமான குடிநீர் விநியோக நேரத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.(17)

## அபிவிருத்தி வேலைகளில் இளைஞர்கள் டிப்ளோமா கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் அபிவிருத்தி வேலைகளில் இளைஞர்கள், தொடர்பான டிப்ளோமா கற்கை நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. சமுதாய சமூக விஞ்ஞான பீடத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்தக் கற்கைநெறியானது, இரண்டு வருடங்களை கொண்டதாகும். ஆங்கில மொழிமூலம் நடத்தப்படும் இந்தக்கற்கை நெறி அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் ஆரம்பமாகவுள்ளது.

அபிவிருத்தி வேலைகள் தொடர்பில் ஆர்வம் உள்ள எவரும் இந்தக் கற்கை நெறியை தொடரலாம், எனவும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் விஞ்ஞான பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட என்னும் முகவரிக்கு அல்லது யாழ்.பிராந்திய நிலையத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களையும், விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். பிராந்திய இணைப்பாளர் எந்திரி ச.ஆ.ஞானேந்திரன் தெரிவித்தார்.

## சங்கானை தபாலகத்திற்கு தந்தித்தூதுவர் நியமனம்

நீண்டகாலங்களுக்குப் பின்னர் சங்கானைத் தபாலகத்துக்கு தந்தித்தூதுவர் ஒருவர் கடந்த முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். தந்திமூலம் தமது பரிமாற்றங்களை மேற்கொள்ளும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட பொதுமக்கள் பலரும் இதனால் நன்மை அடையக்கூடியதாக உள்ளது. இந்தத் தபாலகத்துக்கு தொலைபேசி இணைப்பும் கிடைத்துள்ளதால் இந்தப்பகுதி மக்களுக்கு நமது தந்தித் தொலைபேசி தொடர்புகளை ஏற்படுத்த வசதிகள் ஏற்பட்டுள்ளது. (48)

## சுத்திகரிப்பு தொழிலாளர்களின் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று 11 ஆவது நாளாகவும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சிலர் திருநகர் - குருநகர் பகுதியில் ஏற்பட்ட கோஷ்டி மோதலின் போது தாக்கப்பட்டதாகக் கூறி கடந்த 10 நாட்களாகத் தொடர்ந்து தமது பணிகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.மாநகரசபை ஆணையாளர், நல்லூர் கோட்ட அரசியற்துறையினர் தலையிட்டு ஓர் சுமுகமான தீர்வை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தமது பணிகளைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருவதால் யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட பல முக்கிய இடங்களில் இவர்களின் பணி ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டத்திற்கான முடிவு இன்று பெரும்பாலும் தெரியவரும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## 14 ஈழத்தமிழ் அகதிகள் தலைமன்னார் திரும்பினர்

தமிழ்நாட்டிலிருந்து மேலும் 14 ஈழத்தமிழ் அகதிகள் நேற்றுமுன்தினம் மாலை தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்திய மீன்பிடி வள்ளமொன்றில் நாடு திரும்பிய இவர்கள் மன்னார் உறுமலையில் இறக்கி விடப்பட்டனர்.

கடற்படையினரால் மீட்கப்பட்ட இவர்கள் தலைமன்னார் பொலிஸார் ஊடாக மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். நீதிமன்ற உத்தரவின்பேரில் பிரதேச செயலாளர் ஊடாக சொந்த இடங்களுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (201)

வாரநோக்கு

யாழவன்

# பொறுமைக்கும், எதிர்பார்ப்புக்கும் எல்லையுண்டு அந்த எல்லையை நாம் அடைந்துவிட்டோம்



பிரபாவின் அவசர அழைப்பை நிராகரித்தது அரசு. இடைக்கால ஏறபாடு, இறுதித்தீர்வு இரண்டும் ஒன்றாகவே பேசப்படவேண்டும் என அறிவிப்பு, இன முறுகலை ஏற்படுததி, புலிகள் இலக்கை அடைய முயற்சிக்கின்றனர் - ஜே.வி.பியின் விமல் வீரவன்ச குற்றச்சாட்டு, உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்காவிட்டால், விபரீத விளைவு என எச்சரிக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி, 'பிரபாகரன் போருக்குத் தயார்! இனி எல்லாம் அம்மா கையில் தான்! மதியுரைஞர் பாலா விளக்கம்! வடக்கு - கிழக்கில் முதலில் மக்கள் எழுச்சிப் போராட்டம். தமிழரின் நியாயமான கோரிக்கையை அரசு நிராகரித்திருப்பதை ஆட்சேபித்து, இவை கடந்த வார பத்திரிகைகளில் வெளிவந்த பிரதான செய்தித் தலைப்புகளாகும்.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரையை அடுத்து எழுந்துள்ள கருத்து நிலைப்பாடுகளே மேற்கண்டவையாகும்.

அரசும், எதிர்க்கட்சியும், பொது மக்களும் எனப் பலரும் தமது எண்ணப்பாடுகளை வெளிக்கொணர்ந்ததுடன், செயலிலும் இறங்கத் துணிந்துள்ளனர்.

இதுவரை காலமும் பல மாதங்களாக இழுபட்டு வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான முஸ்தீபுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, உடனடியாக செயலிலே - அதாவது பேச்சுவார்த்தையிலே இறங்க வேண்டிய காலம் இப்போது ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக - பல தடவைகள் அரசுக்குத் தெரியப்படுத்தியிருந்தபோதும், தேசியத் தலைவரின் குரலின் வாயிலாக நேரடியாக அந்த முடிவு அரசுக்கு மட்டுமன்றி, முழு உலகுக்குமே தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளும், தமிழ் மககளும் தமது கொள்கையிலே என்றும் மாறாமல் உள்ளார்கள் எனபதை உலகம் உணர்நதுகொள்ளக்கூடியதாகவுள்ளது.

உறுதி குலையாது இருப்பினும், சில நெகிழ்ச்சித் தன்மைகளோடு பேசுவதற்குப் புலிகள் தயாராகவுள்ளபோதும், அரசு அதற்குத் தயாராகவில்லை.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பதுபோல, அரசுடன் பங்காளிக் கட்சியாக இணைந்துள்ள ஜே.வி.பி- விடுதலைப் புலிகள் ஏதோ இன முறுகலைத் தோற்றுவித்து, அதன மூலமாகத் தமது தனித் தமிழீழ இலக்கை அடைய முயற்சிக்கிறார்கள் எனக் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

ஜே.வி.பியின் இந்த வெளிப்பாடு- அரசியல் அனுபவம் அற்றவர்களின் அலறலாகவே எடுக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், இன முறுகலைத் தோற்றுவித்தவர்கள் யார்? யாருடைய திணிப்பின் காரணமாக தமிழர்கள் ஆயுதம் தூக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்? என்றெல்லாம் ஆராய்ந்து பார்த்துப் பேசின், ஜே.வி.பி இவ்வாறு குதர்க்கங்களை முன்வைக்க முடியாது.

ஏதோ இதுவரை நாட்டில் இன முறுகல் இல்லை என்பது போலவும், விடுதலைப் புலிகளே அதனைத் தோற்றுவிக்க முயல்கிறார்கள் எனவும், அதனூடாக அவர்கள் தனி நாட்டை அடையப் போகிறார்கள் எனவும் பேசுவது - வெறும் வாய்ச் சவாடலுக்குத்தான் பொருத்தமானது.

ஏமாளிகளான சிங்கள மக்களை ஏமாற்றுவதற்கும், அதனூடாக வெளிவரும் சூட்டில் தாம் குளிர்காய்வதுமே ஜே.வி.பியின் எண்ணமாகும்.

இத்தகைய எண்ணம் கொண்ட ஜே.வி.பி - அரசுடன் இணைந்து பங்காளியாக இருப்பதே இன்றைய சமாதானத்துக்கான முக்கிய வேட்டாகும்.

விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையைத் தள்ளி வைத்து, சிங்கள தேசத்துடன் இணைந்து வாழ விரும்பும் நோககிலே, இடைக்கால நிர்வாக யோசனை வரை இறங்கி வந்து, அதற்கான பேச்சுக்களை ஆரம்பிக்கும் உத்வேகததுடன் உள்ளபோது, அதனையும் நிராகரிப்பது அவ்வளவு புத்திசாலித்தனமான விடயமல்ல என்பதை - ஏனோ ஜே.வி.பியும், அரசும் உணர மறுக்கிறார்கள்.

இதன்மூலமாக அவர்கள்தான் தனித் தமிழீழம் உருவாகுவதற்கான வழியையும் ஏற்படுத்தப் போகின்றார்கள் என்பதை, அறியாத அரசியல் சாணாக்கியமுள்ளவர்களாக உள்ளார்கள்.

இன்றைய அரசியலை நகர்த்தினால் போதுமென நினைப்பவர்களுக்கும், தீர்க்கதரிசன சிந்தனையோடும், தூரநோக்குப் பார்வையுடனும் செயற்படும் விடுதலைப்புலிகளுக்கும் எட்டாத பொருத்தமாகவே இருக்கும் இந்த இரு தரப்பினரும் இணைந்து, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது என்பது என்றுமே முடியாத காரியமாகவே இருக்கும் குதிரைக் கொம்பு தேடுவதுபோலவே, இன்றைய அரசிடம் சமாதானப் பற்றை தேடும் முயற்சியாகவே அமையும்.

அதற்காக சாதகமானதொரு அரசியல் சூழ்நிலை ஏற்படும் வரை காத்திருப்பது என்பது, இனியும் தமிழர்களைப் பொறுத்தவரையிலே முடியாத காரியமே. இதனையே தேசியத்தலைவர் தனதுரையிலே - 'பொறுமைக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன. நாம் அந்த எல்லைக் கோடுகளை அடைந்து விட்டோம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இனியும் புலிகளின் பொறுமையைச் சோதிக்க முயன்றால், அது ஆப்பிழுத்த குரங்கின் கதையாகவே முடியும். போருக்கு நாம் தயார் எனப் புலிகள் விடுத்துள்ள அறிவிப்பு - தட்டிக் கழித்துவிடக் கூடியதல்ல.

சர்வதேசம் இந்தவேளையில் தெளிவாக ஒன்றைப் புரிநது கொள்ள வேண்டும். சமாதான நகர்வுகளிலே உண்மையான விசுவாசிகளாக யார் செயற்படுகிறார்கள் என்பதை, உலகம் உணர்ந்து கொள்ளக்கூடியதாகவிருக்கும். யாருக்கு இன்று சமாதானம் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகிறது என்பதையும், உலகால் புரிந்து கொள்ள முடியும்.

இத்தகைய புரிதலுக்கான ஒரு உரையாகவே தேசியத் தலைவரினது மாவீரர்தின உரை அமைந்திருந்தது.

சமாதானத்தை வியாபாரமாக்க முனைந்த சில சக்திகளே, இன்று சமாதானத்துக்கான முட்டுக்கட்டையாக அமைந்துள்ளனர். சமாதானத்தைச் சாட்டாக வைத்து, அதன் மூலம் தமது அரசியல் வியாபாரத்தையும், பொருளாதார மேம்பாடுகளையும் அபிவிருத்தி செய்து கொண்டிருப்பவர்களே - சமாதானம் வருவதை விரும்பாதவர்களாகவுள்ளனர்.

ஆனால், இந்த சக்திகள் போரை மீண்டும் ஆரம்பிப்பதிலும் குறியாக வில்லை. இயன்றவரை இழுத்தடிப்புக்களை மேற்கொள்வதே இவர்களின் நோக்கமாகும். இதனைக் கருத்திற்கொண்டே இடைக்கால தீர்வுடன், இறுதித் தீர்வு தொடர்பாகவும் பேச வேண்டுமென இந்தச் சக்திகள் வலியுறுத்துகின்றன.

ஓர் ஐந்து ஆண்டு காலத்துக்குரிய இடைக்கால திட்டம் தொடர்பாகவே பேசி முடிவெடுக்க முடியாதவர்கள் - ஐம்பது ஆண்டு கால இனப்போருக்கு இறுதித் தீர்வை எட்டிவிட முடியுமென நினைப்பது, கூரையேறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வான மேறி வைகுண்டம் போன கதையாகவே முடியும்.

எனவே, இறுதித் தீர்வு எனும் விடயமானது - முடிவுகள் எதுவும் எட்டப்படாமல், சமாதானப் பேச்சுவார்த்தைகளை இழுத்தடிப்பதற்கான திட்டமே ஆகும்.

இலங்கை இனப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இறுதித் தர்வு என்பது - தமிழீழமாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, அத்தகைய இறுதித்தீர்வு சிங்களத் தலைமைகளுடன் பேசி எடுக்கக் கூடிய விடயமல்ல. எனவே, இறுதித் தீர்வு என்பது புஸ்வாணமாகவே போகும்.

எனவே, அரசுடன் இறுதித்தீர்வு பற்றி பேசுவதால் எந்தப் பலனும் கிடையாது. ஒரு நிலையிலிருந்து நோக்கின் - விடுதலைப் புலிகளின் தலைமைகோருவது போல, இடைக்கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக பேசுவதற்கு அரசு முன்வராத பட்சத்தில், சர்வதேச அனுமதியுடன் புலிகள் போரை மீண்டும் ஆரம்பத்தால், நிச்சயமாக அரசு சொல்லும் இறுதித தீர்வு கிட்டும், சுதந்திர தமிழீழத்தை மலர்ச்சியுடன் எதிர்கொள்ளப் போகிறதா? அல்லது இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசி, நாடு இரண்டாவதை தடுத்து நிறுத்தப் போகிறதா? எதை அரசு நினைக்கிறதோ அதுவே நாளைய முடிவைத் தீர்மானிக்கும்.



இன்று விடுதலைப்புலிகளுக்கு அரசின் முடிவைவிட, சர்வதேச சமூகத்தின் பிரதிபலிப்பே அதிகமாகத் தேவைப்படுகிறது. இதனைத் தேசியத் தலைவர் - சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தத்தை பிரயோகித்து, சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு வழிவகுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த முயற்சியிலே சர்வதேசத்தால் வெற்றியடைய முடியாது போகுமெனில், விடுதலைப்புலிகள் தமது விடுதலைப் போராட்டத்தை ஆயுத வழியிலே தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அனுமதி அளிப்பதுடன், ஆதரவும் நல்கவேண்டும்.

இந்த ஆதரவுப் போக்கிலும், அனுமதியிலும் நியாயப்பாடு நிறையவே இருக்கும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் - பயங்கரவாதிகளின் போராட்டமாக பார்க்கப்பட்ட ஈழவிடுலைப் போராட்டம், இன்று உண்மையான உரிமைப் போராட்டமே என்பதை, சர்வதேசம் நன்றாகப் புரிந்துகொண்டுள்ளது.

எனவே, ஆதரவும், அனுமதியும் அளிப்பது இயலக்கூடிய விடயமே! இதுதான் இலங்கை அரசுக்கு சர்வதேசம் கொடுக்கக் கூடிய உயர்ந்த பட்ச அழுத்தமாகும். இதனைச் சர்வதேசம் செய்யுமா? அல்லது இது விடயமாக இன்னும் மௌனம் காக்குமா?

அரசு - பல நாடுகளிடமிருந்து இராணுவ தளபாட உதவிகளை பெறுவதிலேயே குறியாகவுள்ளது. இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை நிறைவேறாது எனும் நிலை தோன்றியவுடனேயே, ஏனைய நாடுகளுடன் கூட்டுச்சேரத் தொடங்கிவிட்டது.

போர் முனைப்பைக் கொண்டுள்ள அரசு - புலிகளுக்கு ஆதரவான சக்திகளையும், அரசியல் அரங்கிலிருந்து ஓரங்கட்டுவதற்குத் தொடங்கிவிட்டது.

இதற்குப் பேரின வாதக் கட்சி என்ற அடிப்படையிலே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி - திரை மறைவிலே ஆதரவினை அளித்து வருகிறது.

புதிய சட்ட நடைமுறையொன்றைக் கொண்டு வருவதன் மூலம், யதார்த்தமான நிலையை எடுத்துக் காட்டும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் பிரிவினைக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிப்பதே இந்தச் சட்ட நகலின் அடிபபடை நோக்கமாகும்.

இதற்கான முயற்சிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே, அரசு உண்மை நிலையை புரிந்து கொள்வதற்கோ அல்லது அது தொடர்பான புத்திமதிகளைக் கேட்பதற்கோ தயாராகவில்லை.

தமிழ் மக்களுடைய அமைதியான வாழ்விலேதான், சிங்கள மககளுடைய அமைதியும் தங்கியுள்ளது என்பதை இன்னொரு ஈழப் போரின் பின்னர் தான் சிங்களத் தலைமைகள் உணர்ந்துகொள்ளுமோ தெரியாது.

இராணுவத்தினரை அடுக்கடுக்காகப் பெட்டிகளில் வைத்து அனுப்பும்போது, தென்னிலங்கையில் ஏற்படும் சூழல் - அரசை மீண்டும் பணிய வைக்கும்.

'போன மச்சான் திரும்பி வந்தார் பூமணத்தோடு' என்ற மாதிரி, அரசு மீண்டும் சமாதானத்துக்குத் திரும்ப வேண்டிய வழியேற்படும்.

எனவே, ஏற்படவுள்ள அழிவுகளை தவிர்த்துக் கொள்வதற்காக இப்போதே சமாதான முயற்சிகளில் அரசு இறங்க வேண்டும். விழுந்து மூக்குடைபட்டு வருவதைவிட, மரியாதையாக இப்போது பேசமுடியும். எது சாத்தியமாக்கப்படவுள்ளது?

---

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இது பிரசுரமாகிறது

# அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

மனித குடும்பத்தைச் சேர்ந்த சகலரினதும் உள்ளார்ந்த கௌரவத்தையும், அவர்கள் யாவரதும் சமமான, பராதீனப்படுத்த முடியாத உரிமைகளையும் அங்கீகரித்தலே உலகத்தில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பவற்றுக்கு அடிப்படையாகவுள்ளதாலும்,

மனித உரிமைகள் பற்றிய அசிரத்தையும், அவற்றை அவமதித்தலும், மனுக்குலத்தின் மனச்சாட்சியை அவமானப்படுத்தியுள்ள காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு இடமளித்துள்ளதாலும், பேச்சுச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம், அச்சத்திலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுதலை ஆகியவற்றை மனிதன் பூரணமாகத் துய்க்கத்தக்க ஒரு உலகின் வருகையே சாதாரண மக்களின் மிகவுயர்ந்த குறிக்கோளாக எடுத்துச் சாற்றப்பட்டுள்ளதாலும்.

கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும் எதிரான இறுதி வழியாக எதிரெழுச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப்படாமலிருக்க வேண்டுமெனில், சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது அத்தியாவசியமாகவுள்ளதாலும்,

நாடுகளிடையே நட்புறவுகள் ஏற்படுத்தப்படுவதை மேம்படுத்துவது அத்தியாவசியமாகவுள்ளதாலும்,

ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த சகல மக்களும், பட்டயத்திலே அடிப்படை மனித உரிமைகளிலும் ஒவ்வொரு மனிதப் பிறவியினதும் - கௌரவம், பெறுமதி, ஆண், பெண் சமஉரிமை என்பனவற்றிலுமான தமது நம்பிக்கையை மீள வலியுறுத்தி, அதி சுதந்திரச் சூழலில் சமூக முன்னேற்றம், உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தத் துணிந்துள்ளனர் ஆதலாலும்,

மனித உரிமைகளுக்கும், அடிப்படைச் சுதந்திரங்களுக்குமான உலக மதிப்பையும், அனுட்டானத்தையும் மேம்படுத்தலை ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் கூட்டுறவுடன் முற்றுமுழுதாகச் செயன்நிலைப்படுத்த, அங்கத்துவ நாடுகள் சூளுறுதிகொண்டுள்ளதாலும்,

இந்தச் சூளுறுதியை பரிபூரணமாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த உரிமைகள், சுதந்திரங்கள் பற்றிய பொது விளக்கம் இருத்தல் முக்கியமானதாததாலும்,

பொதுச் சபை இப்பொழுது

சமூகத்தில் ஒவ்வொரு தனி மனிதனும், ஒவ்வொரு சாதனமும், இந்தப் பிரகடனத்தை இடையறாது மனதில் இருத்தி, இந்த உரிமைகள், சுதந்திரங்களுக்கான மதிப்பை மேம்படுத்துவதற்கு கற்பித்தல் மூலமும், கல்வி மூலமும், தேசிய, சர்வதேசிய நடவடிக்கைகள் மூலமும் முயலும் நோக்கிற்காகவும், அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் மக்களிடையேயும், அத்துடன் தங்கள் நியாயாதிக்கத்தின் கீழ் வரும் ஆட்புலத்து மக்களிடையேயும் இந்த உரிமைகள், சுதந்திரங்கள் முழு மொத்தமாக வலுவும், பயனுறுதிப்பாடுமுடைய முறையில் ஏற்கப்பெற்று, அனுட்டிக்கப்படுவதை நிலைநிறுத்துவதற்காகவும், சகல மக்களும், நாட்டினங்களும் தத்தமது சாதன இலக்கின் பொது நியமமாகக் கொள்ளத்தக்க இந்த அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வெளிப்படுத்துகின்றது.

**உறுப்புரை 1**

மனிதப் பிறவியினர் சகலரும் சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்கள் மதிப்பிலும், உரிமைகளிலும் சமமானவர்கள். அவர்கள் நியாயத்தையும், மனட்சாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள். அவர்கள் ஒருவருடன் ஒருவர் சகோதர உணர்வுப் பாங்கில் நடந்து கொள்ளல் வேண்டும்.

(நாளை தொடரும்..)

## அமெரிக்க இராணுவ அதிகாரிகள்
# பெண் பயிற்சியாளர் மீது பாலியல் துஷ்பிரயோகம்

அமெரிக்காவின் கொலோறடோ விமானப் பயிற்சி நிலையத்திலுள்ள பெண் கடெற் பயிற்சியாளர்கள் மீது, அமெரிக்க இராணுவத் தளபதிகள் மேற்கொண்டுவந்த பாலியல் துஷ்பிரயோகத்தை பென்ரகன் விசாரணையாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

1993 ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பயிற்சி நிலையத்தில் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்தப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ அதிகாரிகள் 1993 ஆம் ஆண்டு இடம்மாற்றப்பட்டதும், 2003 ஆம் ஆண்டிலேயே அது விசாரணையாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை மக்களுக்குத் தெரியப்படுத்தாமல் பாதுகாக்கும் முயற்சியில் பென்ரகன் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

கொலோறடோவிலுள்ள கடெற் பயிற்சி மையமானது அங்குள்ளவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி விமானப் படை அலுவலர்களாக மாற்றி வருகின்றனர். இங்கேயே இந்தப் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்று வந்துள்ளது.

1993 ஆம் ஆண்டிலிருந்து டசினுக்கு மேற்பட்ட கடெற் பெண் பயிற்சியாளர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் படை தாக்குதல் பலஸ்தீன இளைஞர் பலி



இஸ்ரேல் படையினரின் தாக்குதலில் பலஸ்தீன இளைஞரொருவர் கொல்லப்பட்டுள்ளதாக பலஸ்தீன வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

கொல்லப்பட்டவரின் சடலம் அல் - சேயாஜா பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இதனிடையே நேற்றுமுன்தினம் இஸ்ரேல் படையினருக்கும் பலஸ்தீன கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில், ஒரு இஸ்ரேலியப் படைவீரரும் நான்கு கிளர்ச்சிவாதிகளும் கொல்லப்பட்டனர்.

இஸ்ரேலியப் படைவீரர் கொல்லப்பட்டமை தொடர்பாக பத்திரிகையாளர் மாநாட்டில் முகமூடி அணிந்த ஹமாஸ் போராளிகள் தெரிவிக்கையில் -

தம்மைத் தேடிப் படையினர் வந்த வேளை தாம் ஒரு தொன்னுக்கும் மேலான வெடிபொருட்களை புதைத்து வைத்ததாகவும், இதற்குள் அகப்பட்டே அந்த இஸ்ரேலியப் படைவீரர் உயிரிழந்தாகவும் தமது தரப்பிலும் இருவர் உயிரிழந்ததாகவும் தெரிவித்தனர்.

இதன் பின்னர் இஸ்ரேல் படையினர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இரண்டு ஜிகாத் அமைப்பின் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்.

இதேவேளை போராளிகளின் அல் - சேயாஜா பகுதிக்குள் இஸ்ரேல் படையினர் முன்னேறிச் சென்ற வேளை நடத்திய தாக்குதலில் 10 பொதுமக்கள் காயமடைந்ததாகவும் இவர்களுள் நால்வர் பாடசாலைச் சிறுவர்கள் எனவும் தகவல்கள் தெரிவித்தன.

# உலகில் முதன் முதலாக மது தயாரித்த சீனர்கள்

(பிலடெல்பியா)

உலக நாகரீகம் தொடங்குவதற்கு முன்பு யேசு கிறிஸ்து பிறப்பதற்கு 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் வாழ்ந்தவர்கள் தான் மதுபானம் தயாரிக்கும் கலையைக் கற்று இருந்தனர் என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதற்கு வடக்குச் சீனாவில் ஒயின் தயாரிக்கப் பயன்படுத்திய மட்பாண்டங்கள் ஆதாரமாகக் கிடைத்துள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு முன்பு கி.மு. 5,400 ஆண்டுகளுக்கு முன்பு மதுபானம் தயாரிக்கப்பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் ஈரானில் ஹாஜி பிரஸ் என்ற இடத்தில் கிடைத்தன.

இப்போது சீனாவில் ஹெனான் மாநிலம் ஜியாட் என்ற இடத்தில் கிடைத்த மண் சாடிகளைப் பரிசோதனை கூடத்தில் பரிசோதிக்கப்பட்ட போது அரிசி, தேன், திராட்சைப் பழம் ஆகியவற்றின் சாறுகளைக்கொண்டு மதுபானம் தயாரிக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்த தாகவும், இந்த மண் சாடிகள் கி.மு. 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காலத்தைச் சேர்ந்தவை என்றும் பென்சில் வேனியா பல்கலைக்கழக பேராசிரியர் பேட்ரிக் மெக்கவர்ன் தெரிவித்திருக்கிறார்.

# சீனா மீதான ஆயுத விற்பனைத்தடை தற்போதைக்கு நீக்கப்படமாட்டாது!
## ஐரோப்பிய யூனியன் தெரிவிப்பு

சீனா மீதான ஆயுத விற்பனைத் தடையைத் தற்போதைக்கு நீக்குவதற்கான எந்தவொரு திட்டமும் ஐரோப்பிய யூனியனுக்கு இல்லையென ஐரோப்பிய யூனியனின் சிரேஷ்ட அமைச்சரான நெதர்லாந்து வெளியுறவு அமைச்சர் பேர்னாட் பொட் தெரிவித்தார்.

இவர் தனது இந்தக் கருத்தினை ஐரோப்பிய யூனியன் மற்றும் சீன அதிகாரிகளுக்கிடையில் நெதர்லாந்தில் நடைபெறவுள்ள உயர் மட்டப் பேச்சுவார்த்தைக்கு முன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

சீனாவுக்கான ஆயுத விற்பனைத் தடையை நீக்குவது தொடர்பாக நாம் கடுமையாக முயற்சி செய்து வருகின்றோம். ஆனால், அந்தத் தடையை நீக்குவதற்கு இது சரியான தருணமல்ல எனத் தெரிவித்தார்.

ஆனாலும், சீனா மீதான ஆயுத விற்பனைத் தடையை நீக்கவேண்டுமென பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

ஆனால், ஐரோப்பிய யூனியனால் விற்பனை செய்யப்படும் ஆயுதங்களை சீனா தாய்வானுக்கு எதிராகவும் மற்றும் அமெரிக்காவுக்கு எதிராகவும் உபயோகப்படுத்து மெனவும் - பிராந்திய முரண்பாடுகளை உருவாக்குமெனவும் எனவே இந்த ஆயுத விற்பனைத் தடை நீக்கக் கூடாதென அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அவ்வாறு இல்லாமல் சீனா



மீதான ஆயுத விற்பனைத் தடை நீக்கப்படுமாக இருந்தால், ஐரோப்பிய யூனியனுக்கு வழங்கப்படும் இராணுவ தொழில்நுட்ப உதவிகள் நிறுத்தப்படுமெனவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

ஆனால், இந்தத் தடை தொடர்ந்து நீடிக்குமாக இருந்தால், இரு தரப்பு உறவுகள் நிச்சயம் பாதிக்கப்படுமெனவும் இது ஒரு அரசியற்பாகுபாடான செயற்பாடெனவும் சீனப் பிரதி வெளியுறவு அமைச்சர் சாங் ஜெகூய் இந்த மாதத் தொடக்கத்தில் தெரிவித்திருந்தார்.

கடந்த 1989 ஆம் ஆண்டு சீனாவின் தியென்மென் சதுக்கத்தில் இடம்பெற்ற மாணவர் படுகொலைகளை அடுத்து சீனா மீது ஐரோப்பிய ஒன்றியம் ஆயுத விற்பனைத் தடையை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகில் பட்டினியால் இறப்போர் தொகை வேகமாக அதிகரித்து வருகின்றதாம்!
## ஐ.நாவின் புள்ளி விபரம் தெரிவிப்பு



ஒவ்வொரு ஐந்து செக்கனுக்கும் ஒவ்வொரு குழந்தைகள் உலகில் பட்டினியால் இறப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 2015ஆம் ஆண்டில் உலகில் பட்டினியால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையை சரி அரைவாசியாகக் குறைப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் திட்டமிட்டுள்ளபோதும், வருடந்தோறும் பட்டினியால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் 5 மில்லியனிற்கும் மேற்பட்ட குழந்தைகள் பட்டினியால் இறப்பதாகவும், அத்துடன் பட்டினியால் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 1996 ஆம் ஆண்டில் இருந்தே வேகமாக அதிகரித்துவருவதாகவும், உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உலகின் வறிய நாடுகளின் பட்டியலில் இறப்போரது எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைப்பதாயின் அதற்கு உலகின் பணக்கார நாடுகள் பாரிய ஆதரவு வளங்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் பட்டினியைக் கட்டுப்படுத்துவதற்காகச் செலவிடும் தொகை வருடாந்தம் 30 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துச் செல்கின்ற போதும், பட்டினியால் இறப்போர் எண்ணிக்கை குறைவடையவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் சீனா மற்றும் இந்தியாவின் பட்டியலில் பாதிக்கப்படுவோரது எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் புள்ளி விபரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் உலகில் ஆபிரிக்க நாடுகளிலேயே அதிகளவானோர் பட்டினியால் இறப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# உக்ரேன் எதிர்க்கட்சித் தலைவரை விஷம் கொடுத்து கொல்ல முயற்சி
## வைத்தியர்கள் அதிர்ச்சித் தகவல்

முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்துசென்ற நாடுகளில் ஒன்றுதான் உக்ரேன். இங்கு கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடந்தது. இதில் ஜனாதிபதி பதவிக்கு பிரதமர் யானு கோவிச், எதிர்க்கட்சி தலைவர் யுஷ்செஸ்கோ போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில் பிரதமர் விக்டர்யானுகோவிச் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தேர்தலில் முறைகேடு நடந்ததாகவும் மறு தேர்தல் நடத்த வேண்டும் என்றும் யுஷ்செஸ்கோ முறையிட்டிருந்தார். இதையடுத்து உக்ரேன் முழுவதும் இரு தரப்பினருக்கும் இடையே கலவரம் மூண்டது.

உயர் நீதிமன்றமும் இந்தத் தேர்தல் செல்லாது என்று அறிவித்துள்ளது. நாடாளுமன்றமும் தேர்தல் வெற்றி செல்லாது என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஆனால் மறு தேர்தல் நடத்தவும் ஜனாதிபதிப் பதவியை விட்டுக் கொடுக்கவும் யானுகோவிச் தயாராக இல்லை.

இதனால் குழப்பநிலை நீடிக்கிறது. இந்தப் பிரச்சினையில் ரஷ்யாவுக்கும் மேறகத்திய நாடுகளுக்குகிடையேயும் பிளவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட யுஷ் செஸ்கோவை விஷம் கொடுத்து கொலை செய்ய முயற்சிகள் நடந்துள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் யுஷ் செஸ்கோ தேர்தல் பிரசாரம் செய்த போது அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவர் ஒஸ்ரிய நாட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் அவரை விஷம் கொடுத்து கொல்ல முயற்சி நடந்திருப்பதாக தற்போது தெரிவித்துள்ளனர். பிரசாரத்தின்போது, உணவிலோ தண்ணரிலோ விஷம் கொடுத்திருக்கிறார்கள் அல்லது ஊசி மூலம் விஷம் செலுத்தியிருக்க வேண்டும்.

இதனால்தான் அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. டையாக்சின் போன்ற விஷத்தை செலுத்தியிருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

இந்தத் தகவல் உக்ரேனில் மீண்டும் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## அமெரிக்கப் புலனாய்வுத் துறையை
# மாற்றியமைப்பதற்கான மசோதா செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது



அமெரிக்க புலனாய்வுத் துறையினை முற்றுமுழுதாக நவீன தொழில்நுட்பங்களுடன் மாற்றியமைப்பது தொடர்பாக, மக்கள் பிரதிநிதிகள் சபை முன்வைக்கப்பட்ட மசோதா பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்காவின் உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது அல்ஹெய்டாத் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்று - மீண்டுமொரு தாக்குதல் இடம்பெறுவதைத் தடுப்பதற்காகவே இந்த மசோதா செனற் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜேர்ஜ்புஷ்ஷின் சட்டமூலமாக்கப்பட உள்ளது.

இதற்கமைய தேசிய புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் என்கின்ற புதிய பதவிநிலையொன்று உருவாக்கப்படவுள்ளது. தேசிய புலனாயவுத்துறைப் பணிப்பாளர் சி.ஐ.ஏ மற்றும் எவ்.பி.ஐ ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுவார் என அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செப்ரெம்பர் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவந்த தேசிய பயங்கரவாதத்தடுப்பு நிலையத்தினாலே அமெரிக்க புலனாய்வுத்துறையினை மாற்றியமைப்பது தொடர்பான திட்டவரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டமானது சந்தேகத்திற்கிடமானவர்களை உடனடியாகக் கைதுசெய்தல், எல்லைப்புறங்களில் ராடர் மற்றும் அபாய ஒலி எழுப்பும் கருவிகளைப் பொருத்துதல், விமான நிலையம், பாதுகாப்பு மையம் போன்றவற்றில் ஸ்கான் போன்ற உயர் தொழில்நுட்பக் கருவிகளைப் பொருத்துதல் உள்ளிட்ட உச்சப் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கொண்டுள்ளது.

இந்தத்திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு வருடந் தோறும் 2000 எல்லைப் பாதுகாப்புப் படையினர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 'சக்தி' மீதான தாக்குதலுக்கு சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சக்தி ஒளிபரப்பு, ஒலிபரப்பு நிறுவனத்தின் யாழ்.பிராந்திய அஞ்சல் நிலையம் கடந்த திங்கட்கிழமை இரவு தாக்குதலுக்குள்ளான சம்பவத்தை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் -

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சக்தி, சிரச, எம்.ரி.வி வலையமைப்பின் ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஊடக சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட பாரிய அச்சுறுத்தல்.

யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தில் இரண்டாவது மாடியில் இயங்கும் இந்த ஒளி, ஒலிபரப்பு மத்திய நிலையத்திற்குள் கடந்த 6 ஆம் திகதி இரவு 9.10 மணியளவில் திடீரென புகுந்த குழுவொன்று அதனை முழுமையாகத் தாக்கி அழித்துள்ளது. இச்சம்பவத்தினால் ஏற்பட்ட சேதம் 10 மில்லியனுக்கும் அதிகமாகும்.

இந்த ஒளி, ஒலிபரப்புச் சேவை நிலையம் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. தாக்குலை நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. அத்துடன் அவர்கள் சுதந்திரமாகத் தப்பிச்சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் காரணமாக எம்.ரி.வி, எம்.பி.சி வலையமைப்பின் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமன்றி அதற்கு மேல் யாழ். மக்களுக்கு தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இவ்விரு சம்பவங்களையும் முன்வைத்தே சுதந்திர ஊடக இயக்கம் இதனைக் கண்டித்துள்ளது. அத்துடன் இந்த ஜனநாயக விரோத செயல் தொடர்பாக நீதியான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குமாறும் யாழ்ப்பாணத்தில் எம்.ரி.வி, எம்.பி.சி வலையமைப்பிற்கு இச்சேவையை கொண்டு நடத்துவதற்கு உரிய பாதுகாப்பை வழங்குமாறும் அரசிடம் கோருகின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற உறுப்பினராக கடமையாற்ற அனுமதிக்கவேண்டும்

## சபாநாயகரிடம் எஸ்.பி கோரிக்கை

(கொழும்பு)

நுவரெலியா மாவட்ட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தான் நாடாளுமன்றில் தனது கடமைகளை ஆற்றுவதற்கு அனுமதி அளிக்கவேண்டும் என 2 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்க - சபாநாயகருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இந்த ஏற்பாட்டைச் செய்து தருமாறு இந்தக் கடிதத்தில் அவர் மேலும் கோரியுள்ளார்.

இதேவேளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவின் சிறைத்தண்டனை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் தாம் நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்றிலும் தாம் எதிர்ப்பைக் காட்டியுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர அது குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியதாகவும் அவர் தெரிவித்தார்.

# அம்பேபிட்டிய கொலையுடன் பொலிஸ் அதிகாரிகளுக்கு தொடர்பா விளக்கம் கேட்கிறது ஆணைக்குழு!

மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவின் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும், சகல பொலிஸ் உத்தியோகத்தர்களிடமும் விசாரணை நடாத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவை பொலிஸ் ஆணைக்குழு கேட்டுள்ளது.

பொலிஸ் ஆணைக்குழு இவ்வாறு கேட்பதற்கு முன்னரேயே இந்தக்கொலைச் சம்பவத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் யாருக்காவது தொடர்புண்டா என்பதனை விசாரணை மூலம் கண்டறியுமாறு - பொலிஸ் இன்ஸ்பெக்டர் யூனியன், ஜனாதிபதி சந்திரிகா மற்றும் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ ஆகியோருக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இதனிடையே நீதிவான் அம்பேபிட்டியவின் கொலையுடன் தொடர்புடையவரெனத் தெரிவித்து கைது செய்யப்பட்ட முக்கிய சந்தேக நபரான பொட்டு நௌபரின் வாக்கு மூலத்தின்படி இந்தக் கொலையுடன் பல பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், சட்டத்தரணிகளுக்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட இந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சட்டத்தரணிகள் மீது விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈ.என்.டி...

பிரிவினர் இறங்கியுள்ளனர்.

காலாவதியாகிப் போன ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பினருக்குப் புத்துயிர் ஊட்டும் வேலையாக பல இரகசியமான சதி வேலைகளில் ஈடுபட்டுவரும் இந்திய உளவுப்பிரிவு கோடம்பாக்கத்தில் உள்ள ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் தலைவர் ஞானசேகரன் அலுவலகத்தில் சோதனை நடாத்தி ஞானசேகரன் உட்பட 9 பேரை கைதுசெய்து விசாரணை செய்வதாக ஊடகங்களுக்கு அறிக்கை கொடுத்துவிட்டு இரகசியமான மறைவிடம் ஒன்றுக்கு மாற்றியுள்ளதாக தெரியவருகிறது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற காரணத்தால் அவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு இருப்பதாக போலியான கருத்தைக் கூறிவரும் றோ அமைப்பினர் விடுதலைப்புலிகள் இந்தியாவுக்குள் ஊடுருவி விடுவார்கள் என்ற அச்சத்திலும் -

அவ்வாறு ஊடுருவும் உறுப்பினர்கள் கருணாகுழு என்று கூறிக்கொண்டு இந்த தமிழ் தேசவிரோத கும்பலுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தலாம் என்ற சந்தேகத்திலும் தந்திரமான முறையில் பாதுகாப்பாக இவர்களை இடம்மாற்றி இருப்பதாக தெரியவருகிறது.

## மட்டக்களப்பு...

இதில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை ரி-56 ரக துப்பாக்கி மூலம் 6 வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக தெரியவருகிறது.

## பொது...

கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா - வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இலங்கையின் அரசியல் அமைப்பினையோ அல்லது தேசியக் கொடியினையோ ஏற்றுக்கொள்ளவில்லை எனவே இது சாத்தியப்படாத ஒன்று எனத் தெரிவித்தார்.

கற்சுமி கல்வி நிறுவனம்
பிரத்தியேக வகுப்புக்கள் சேவை
166, நாவலர் வீதி, யாழ்.
தரம் 3 - 11 (O/L) வரை
கல்வியாண்டு - 2005
ஆரம்பம் 10.12.2004
வெள்ளி 4.30 P.M.
(சி-3449)

# மகேஸ்வரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே

(கொழும்பு)

அணமைய நாடாளுமன்ற அமர்வுகளில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் நடந்துகொண்ட விதம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று இது தொடர்பாக இடம் பெற்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் விசேட கூட்டத்தில் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தமது பக்க முழு அதிருப்தியை வெளியிட்டார்.

விடுதலைப்புலிகளின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராகச் செயற்படும் மகேஸ்வரனுக்கு வேறு அரசியல் பின்னணி இருப்பதாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள், மீளக்குடியமரும் மக்கள், நெருக்கடிகளில் சிக்கி அவதியுறும் மக்களின் அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் NESHOR நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

# இந்திய கடற்படையுடன்...

இந்த ஒத்திகைப் பயிற்சி கொழும்புக்கு வெளியே உள்ள கடற்பகுதியில் மூன்று பிரிவுகளாக தேடுதல், மீட்பு மற்றும் கடற்கொள்ளைப் பாதுகாப்பு என இடம்பெறவுள்ளது.

இந்த ஒத்திகையில் இந்திய கரையோர காவற்படையின் ஆழ் கடல் ரோந்துக் கப்பல்களான ஜி.சி.எஸ்.சரங், ஜி.சி.எஸ்.துர்க்கா பாய், தேஷ்முக் ஆகியனவும், கண்காணிபபு விமானம் ஒன்றும் செடெக ஹெலி கொப்டர் ஒன்றும் பங்கேற்கவுள்ளன.

இலங்கை கடற்படையின் தரப்பில் இந்தியாவிடம் கொள்வனவு செய்ப்பட்ட ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களான சயுர மற்றும் ஜயசாகர ஆகிய போர்க்கப்பல்களும், பீரங்கிப் படகு ஒன்றும், இரண்டு அதிவேக தாக்குதல் படகுகளும் பங்கு கொள்ளவுள்ளன. இந்த ஒத்திகையில் பங்கேற்பதற்காக இந்திய கடற்படையின் சிரேஷ்ட அதிகாரியான வைஸ் அட்மிரல் ஏ.கே.சிங் கொழும்புக்கு வரவுள்ளார்.

இந்திய - இலங்கை கடற்படையினரின் கூட்டுப் பயிற்சிக்கான ஒப்பந்தம், அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கு சென்ற போது கைச்சாத்திடப்பட்டதெனவும்-

இந்தப் பயிற்சியின் மூலம் இலங்கை கடற்படையின் தாக்குதல் வலுவை அதிகரிப்பதே திட்டமாக இருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

# தினேஷ் ராஜரட்ணம் விடுவிப்பு உண்மையில்லை

ஈராக்கில் கடத்தப்பட்ட இலங்கைத் தமிழரான தினேஷ் ராஜரட்ணம் விடுவிக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் தவறு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இவர் விடுவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதும், ஈராக் கிளர்ச்சிவாதிகளால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்டவர்களில் இவரும் அடங்கியுள்ளாரா என்பதைக் கண்டறிவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்தார்.

அத்துடன் இவர் விடுவிக்கப்பட்டதான தகவல் குறித்து ஆராய்வதற்காக விசேட தூதுக்குழுவொன்று ஈராக் சென்றுள்ளதாகவும் அடுத்த சில மணி நேரத்திற்குள் இவரது விடுதலை குறித்து உறுதியான தகவல்கள் கிடைக்குமெனவும் லெபனான் மற்றும் குவைத்திலுள்ள இலங்கை தூதுவர்கள் தெரிவித்தனர். (01)

## எஸ்.பியை அழைத்துவராவிடின்...

எஸ்.பி.திஸநாயக்கவை நாடாளுமன்றத்துக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் எடுக்கவேண்டும். வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி நாடாளுமன்றத்துக்கு இவர் சமூகமளிக்கமுடியாது. இது நாடாளுமன்ற உரிமையை மீறுகின்றது. எனவே, எஸ்.பி.திஸநாயக்கவை மீண்டும் நாடாளுமன்றத்துக்கு அழைத்துவரவேண்டும். இது சாத்தியப்படாதுவிட்டால் அரசியல் கலகமொன்று ஏற்படுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உரையாற்றிய ஆளும் கட்சி பிரதம அமைப்பாளர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே -

இந்த வேண்டுகோள் குறித்து கட்சித் தலைவரின் கூட்டத்தில் ஆராயப்பட்டு ஜனாதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜேசேகரவின் உரையில் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்து சட்ட ஆலோசனை மேற்கொண்டு தீர்மானமொன்று எடுக்கப்படும் எனத் தெரிவித்த சபாநாயகர் -

எஸ்.பி.திஸநாயக்க மீண்டும் நாடாளுமன்றத்துக்கு அழைத்து வரும் வரை சபையை ஒத்திவைக்கவேண்டிய தேவையில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் அமளி துமளி ஏற்பட்டது. ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபை நடுவில அமர்ந்திருந்து ஆர்ப்பாட்டம் செய்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் சபை செங்கோலை எடுத்துக் கொண்டு ஓடினார்.

இந்த செங்கோல் எதிர்க்கட்சி ஆசனப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் படைக்கல சேவகர்களினால் கண்டெடுக்கப்பட்டு மீண்டும் அந்த இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

நாடாளுமன்ற அமர்வில் இடம் பெற்ற அமளிதுமளி காரணமாக சபை கூடி சுமார் 30 நிமிடங்களினால் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் சபை கூடியபோது இந்த அமளி துமளி தொடர்ந்ததையடுத்து நேரம் குறிப்பிடாமல் சபையை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

# மரண அறிவித்தல்கள்

## திரு வ.ஐ.தமோதரம்பிள்ளை

(முன்னாள் கிராமோதய சபை உறுப்பினர், நெடுந்தீவு - சமாதான நீதிவான்)

நெடுந்தீவு மேற்கு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வ.ஐ.தாமோதரம்பிள்ளை (J.P.) 07.12.2004 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காமாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை, பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனுமாவார்.

நாகேஸ்வரி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, சந்தானலட்சுமி, வரதலட்சுமி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் -சண்முகம்பிள்ளை (வடகாடு), அம்பலவாணர் (மன்னார் ஸ்ரோர்ஸ்), நல்லதம்பி (புதுக்கடை - நெடுந்தீவு), சுந்தரம் (இந்தியா), பாக்கியம் (கனடா), காலஞ்சென்றவர்களான மீனாட்சி, காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இறுதிக் கிரியைகள் 09.12.2004 இன்று பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக நெடுந்தீவு மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
ந.தர்மகுமார்
(பெறாமகன்)

புதுக்கடை,
நெடுந்தீவு.

(சி-3448)

## இராசரத்தினம் கனகம்மா

யாழ்ப்பாணம் வயாவிளானைப் பிறப்பிடமாகவும், பலாலி வீதி கோண்டாவில் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் கனகம்மா 07.12.2004 செவ்வாய் காலமானார்.

இவர் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், மலர்மகள், சிவமகள், சிவபாலன், சத்தியபாலன், ஜெயமகன், குணமகள், குகபாலன், நாமகள் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். இறுதிக்கிரியை 09.12.2004 பி.ப. 4 மணிக்கு இடம்பெறும்.

தகவல்:-
ஞானலிங்கம் (மருமகன்)

(இ)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 09.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.